


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபேராதம்

- உருவகக் கதைகள் -

மூதூர் முகைதீன்

வெளியீடு

மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபோதம்

- உருவகக் கதைகள் -

ஆசிரியர் : மூதூர் முகைதீன்

வெளியீடு : நவம்பர் 2016

தளக்கோளம் : தௌபீக் சனூஸ் (0771544100)

வெளியீடு : மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்
நொக்ஸ் வீதி, மூதூர்-04

விலை : ரூ.250.00

பதிப்புரிமை : ஏ.எம். முகைதீன்
நொக்ஸ் வீதி
மூதூர்-04
ஸ்ரீலங்கா.

**APOTHAM** - Creative Stories • Author : A.M. Mohaideen •
First Edition : November 2016 • Copy Rights : Author •
Layout & Cover Design : Thowfeek Sanoos 0771544100 •
Publication : Mutur Kalai Ilakkiya Ondriyam •
Printers : AJ Prints-Dehiwela •
Price : Rs. 250.00 Pages : VIII + 83

**ISBN : 978-955-52246-1-1**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருவங்களின் உருவாக்கம்

எனது இலக்கியப் பயணம் நீண்டகாலமாக கவிதைத் தளத்திலேயே கால் பதித்து வந்துள்ளது. ஒரு மாற்றத்தை வேண்டி இன்று இந்த உருவகக் கதைகளை உங்கள் முன் உலாவ விடுகின்றேன்.

என்னுடைய முதல் இலக்கியப் பிரவேசம் சிறுகதையே யாகும். 1970ம் ஆண்டுகளில் தினபதி தினசரியில் தினமொரு சிறுகதைத்திட்டம் மூலம் எழுத்துலகில் தடம் பதித்தேன். அதன்பின் சிறுகதைகளுடன் கவிதைகள் மற்றும் உருவகக் கதைகளையும் பத்திரிகைகளில் எழுதி வந்துள்ளேன். எனினும் கவிதைகளிலேயே எனது நாட்டம் கூடுதலாக இருந்து வந்துள்ளது.

சமகால ஈழத்து இலக்கியப் பரப்பில் கவிதை, சிறு கதை, நாவல் சார்ந்த புனைகதை நூல்களும், ஆய்வு, வரலாறு போன்ற புனைவுசாரா இலக்கிய நூல்களும் கணிசமாக வெளிவந்து கொண்டிருப்பதைக் காணக்கூடியதாயுள்ளது. இவை யாவும் இலக்கிய வாசகர்களுக்கு நல்ல தீனியாகும் என்பதில் ஐயமில்லை.

இந்த தொடரில் ***"உருவகக் கதைகள்"*** என்ற இலக்கிய வடிவம் பழைமைமிக்கதாகக் காணப்படினும் அவற்றின் வரவுகள் மிக அரிதாகவே உள்ளன.

கவிதைகளைப் பொறுத்தவரை அவை முன்னைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளிலிருந்து சற்று விலகி படிமம், குறியீடு என்ற பிரயோகங்களால் இன்று புதுக்கவிதைகளாக செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றன. இதைப் போலவே சிறுகதைகளின் ஒரு பரிணாம வளர்ச்சியாக உருவகக் கதைகளைக் குறிப் பிடலாம் என்பது எனது அபிப்பிராயமாகும்.

1970 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் நம் நாட்டில் எஸ்.முத்துமீரான், எஸ்.பொன்னுத்துரை, எம்.ஐ.எம். மஷ்ரீர் மௌலவி, உயன்வத்தை ரம்ஜான், எம்.ஐ.முஸம்மில் போன்றவர்களினால் அதிகமான உருவகக் கதைகள் பத்திரிகைகளில் எழுதப்பட்டன. வேறுபலரும் இதில் அதிகம் ஈடுபாடு காட்டினர். அத்தோடு உருவகக் கதைத் தொகுப்புக்கள் பலவும் வெளிவந்துள்ளன. ஆனால் பிற்காலத்தில் இவற்றின் வரவுகள் மிகவும் மந்த கதியிலேயே காணப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

தற்சமயம் சில நூல்கள் அவ்வப்போது வெளி வந்தாலும் அவைகள்பற்றி ஆய்வாளர்களாலோ, ஊடகங்க ளாலோ எங்கும் பெரிதாகப் பேசப்படவில்லை என்பது ஒரு குறையாகவே உள்ளது.

இன்றைய அதிநவீன தொடர்பாடல் யுகத்தில் வாசிப்பின் ஆர்வம் சகல மட்டங்களிலும் பாரிய வீழ்ச்சியைக் கண்டுள்ளமை கண்கூடு. இது இத்துறையில் ஏற்பட்ட மிகப் பெரும் பின்னடைவாகும். இந்நிலையில் இத்தகைய புதிய முயற்சிகள் மூலம் வாசகர்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்த முடியும் என நம்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள், மற்றும் புதிய தலைமுறை வாசகர்களது வாசிப்புத் தளத்தில் ஒரு மாற்றத்தை உருவாக்கும் நோக்கிலேயே இவ் உருவகக் கதைகளை ஆக்கியுள்ளேன். இது காலத்தின் தேவையாகும் என்றே கருதுகின்றேன்.

இதிலுள்ள கதைகளின் பெரும்பாலான தலைப்புக்கள் கூட கலைச் சொற்களாகவே உள்ளன. இதன் மூலம் அவர்க ளின் வாசிப்புத் தேடலை மேலும் அதிகரிக்கச் செய்யமுடியும். இதற்கு ஒரு தூண்டுகோலாக ***"அபோதம்"*** இருக்கும் என்பது எனது எதிர்பார்ப்பு.

இதில் இடம்பெற்றுள்ள பல கதைகள் 1974 ஆம் ஆண்டிலி ருந்து தேசியப் பத்திரிகைகளில் என்னால் எழுதப்பட்டவை களாகும். உருவகக் கதைகள் அனேகமாக நீதியைப் புகட்டு கின்ற பழைய நீதிக் கதைகளின் சாயலை ஒத்ததாக இருப் பினும் இதன் உள்ளடக்கமும் கதையைக் கூறும் பாங்கும் வித்தியாசமானது. மேலோட்டமாக நோக்கும்போது இவ் உருவகக் கதைகள் சிறுவர் இலக்கிய வகையை சார்ந்த தன்மையையும் கொண்டுள்ளதைக் காணமுடிகின்றது.

இங்கு பெரும்பாலும் அஃறிணைகளே குறியீடுகளாகவும், அவைகளே கதை சொல்லிகளாகவும் இருக்கும். இது உருவகக் கதைகளுக்குரிய பொதுமைப் பண்பாகும். இந்த அடிப்படை யிலேயே இக்கதைகளின் உருவாக்கம் அமைந்துள்ளது.

மேலும் இதிலுள்ள கதைகள் ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு செய்தியை வாசிப்பவர்களின் சிந்தனைக்காக விட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது நிறைவேறினால் அதுவே இக்கதைகளுக்கு கிடைத்த வெற்றியாக இருக்கும்.

சாய்ந்து கிடக்கும் ஒரு வரலாற்றுக் கோபுரத்தை தற்கால இலக்கியப் புலத்தில் தூக்கி நிறுத்தும் பணியாகக் கருதி இந் நூலை உங்கள் கரங்களில் சமர்ப்பிக்கின்றேன். இனி இது பற்றிய அபிப்பிராயங்களையும், காத்திரமான விமர்சனாங்க ளையும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றேன்.

இறுதியாக இதனை அழகுற வடிவமைத்த ஜனாப் தௌபீக் சனூஸ் அவர்களுக்கும், இக்கதைகளை பிரசுரித்த பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கும் இன்னும் இந்நூல் வெளிவர உதவிய சகல ஆத்மார்த்த நட்புக்களுக்கும் என் இதய நன்றிகள்.

**மூதூர் முகைதீன்**
10.11.2016

நொக்ஸ் வீதி,
மூதூர் - 05
ஸ்ரீலங்கா
077-4203500



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்செயல் ஒழிய
வெண்புறாவைத் தூதுவிட்ட
மனித நேயமிக்க மனிதர்
கவிஞர், எழுத்தாளர்
பல்துறைக் கலைஞர்

மர்ஹூம் எம்.எச்.எம். ஷம்ஸ்
அன்னவருக்கு

இந்நூல் அர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேசும் உருவகங்கள்...

01. அகம்பாவம்

02. சுதந்திரம்

03. நியதி

04. மனித குணம்

05. ஏமாற்றம்

06. அபோதம்

07. திருப்தி

08. இடிம்பு

09. சுயநலம்

10. தாளாண்மை

11. ஆற்றல்

12. ஆகுதி

13. சிரஞ்சீவி

14. வாதகம்

15. புரிந்துணர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதம்பாவம்



கோடை வெயிலின் அகோரம் அந்த வயல் நிலத்திலுள்ள பயிர்களை வாட்டி வதைத்தது. மேட்டுப் பகுதியிலுள்ள சிறிய பற்றைகளின் இலைகள் வெப்பத்தால் சுருண்டும், வதங்கியும் காணப்பட்டன. எங்கும் படர்ந்து வியாபித்திருந்த புற்களின் தாள்கள் கூட கருகி வைக்கோலாக மாறிக் கொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தன. வரட்சியின் தகிப்பில் யாவும் பதறித் துடித்தன.

அந்த பரந்த வெளியின் மத்தியில் உயர்ந்து படர்ந்து வளர்ந்திருந்த' ஒரு பூவரசு மரம் மட்டும் பச்சைப் பசேலென மதளிப்புடன் காட்சியளித்தது. இந்தக் கோடை காலத்தில் சிறிய தாவரங்கள் படும் அவஸ் தைகளும், வேதனைகளும் அதற்கு வேடிக்கையாகத் தெரிந்தன. இடைக்கிடை கிளைகளை அசைத்து சிலிர்த்துக் கொண்டது. பூமித்தாய் சேமித்து வைத்திருந்த அமுத நீரை பூவரசு மரம் தன் கூரிய வேர் களினால் துளைத்து ஆழ ஊடுருவிச் சென்று உறிஞ்சிக் குடித்து வளர்ந்ததால் புடைத்து செழித்தி ருந்தது. இதனால் சிறிய தாவரங்களின் சிரமத்தினை அலட்சியப்படுத்தும் நோக்கில் அடிக்கொரு தடவை அவைகளைப் பார்த்து அட்டகாசமாக நகைத்தது.

வரட்சித் தாகத்தினால் தவித்தபடி இதனை நீண்ட நேரம் அவதானித்துக் கொண்டிருந்த குப்பை மேனி யொன்று பொறுமை இழந்து,

"என்ன பூவரசரே.... எமது வேதனை உமக்கு வேடிக் கையாகிப் போய்விட்டதா.... எங்களைப் பார்த்து அப்படி என்ன ஒரு நக்கல் நகைப்பு...." என சற்றுக் கோபமாகக் கேட்டது.

"அடடா உனக்கு ரோசம் வந்துவிட்டதா....? ஒரு வெயிலுக்குத் தாக்குப் பிடிக்க முடியாத நீயெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் போன்ற பெரியவர்களைப் பார்த்து கேள்வி கேட்குமளவிற்கு துணிந்துவிட்டாய். இந்த வெப்ப காலத்தில் நாளை வரைக்கும் தாக்குப் பிடிக்க முடியாமல் சாகவிருக்கும் உன்னைப் பார்த்து சிரிக்காமல் என்ன செய்வது." என பூவரசு அகம்பாவத்துடன் அளித்த பதிலால் குப்பை மேனியின் கோபம் மேலும் அதிகமாகியது.

"உனக்கிருக்கும் வசதி வாய்ப்புக்களினாலும், பலத்தினாலும் எம்போன்ற எளியவர்களை நீ ஏளனம் செய்வது மகா தவறு. எப்போதும் நிலைமை உனக்கு சாதகமாக இருக்காது என்பதை உணர்ந்துகொள். ஒரு நாளில் இந்த உண்மையை நீ அறியத்தான் போகின்றாய்" எனக் கடுமையான தொனியில் பேசியது.

"ஏய், குப்பைமேனியே..... ஏன் வீணாக உளறுகிறாய். ஒரு சாண் உயரம்கூட இல்லாத நீ எங்கே, வீரமும் பாரிய உருவமுள்ள நான் எங்கே, என்னிடமா கதையளக்கின்றாய். பல வருடங்கள் நிலைத்து நிற்கும் என்னுடன் ஒரு சில நாட்களில் மடியும் நீ மல்லுக் கட்டாமல் வாயை மூடிக்கொண்டிரு" என ஏளனமாகவும் எச்சரிக்கையாகவும் பூவரசு கூறியது.

பூவரசு மரத்தின் தலைக்கனம்பிடித்த பேச்சை பொறுமையுடன் சகித்துக் கொண்ட குப்பைமேனி

"காலம் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்காது. இது உனது காலம். அதுதான் இப்படிக் கதைக்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றாய். உன்போல் வீண் மமதை கொண்டவர்கள் நீண்ட காலம் வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை. இது உனக்கும் ஒருநாள் நிச்சயம் நடக்கும்" எனச் சபித்தது.

பூவரசு மரமோ இதனைப் பொருட்படுத்தாது காற்றில் கிளைகள் அசைய நகைத்தபடி தன் பாட்டில் இருந்தது.

காலங்கள் நகர்ந்தன. பூவரசு மரத்தினைத் தவிர அங்கிருந்த அத்தனை செடிகளும் வெப்பத்தின் தாக் கத்தால் கருகி சருகாகி அழிந்து மண்ணில் படிந்து கிடந்தன. அன்று ஒரு நாள் வானம் இருண்டது. கருமேகங்கள் அங்கிமிங்குமாக ஓடி ஒன்றாகத் திரண்டன. காற்றும் பலமாக வீசத் தொடங்கியது. நேரம் போகப்போக காற்றின் வேகம் அதிகரித்து சூறாவளியாக உருவெடுத்தது. அந்த பூவரசு மரத்தின் கிளைகளில் குடிகொண்டிருந்த பறவைகள் யாவும் ஏனோ கத்தியபடி எங்கோ ஒரு திசையை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன.

உக்கிரமடைந்த சூறாவளியின் தாக்கத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் பூவரசு மரத்தினது கிளைகள் நிலத்தைத் தொடுமளவிற்கு பேயாட்டம் போட்டது. அடிமரம் அசையத் தொடங்கியது. இடைக்கிடை படார்... படாரென கிளைகள் முறிந்து காற்றில் தூக்கி வீசப்பட்டதால் அதன் பலம் குறையத் தொடங்கியது.

திடீரென மேலும் ஒரு சுழல் காற்று வேகமாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கியதும் பூவரசு நிலத்தைப் பிளந்து வேர்களை உயர்த்தியவாறு தரையில் தலை கீழாக சரிந்து விழுந்தது.

வானுயர வளர்ந்து படர்ந்திருந்த பூவரசு மரம் தரை யோடு தரையாக உயிரற்ற சடத்தைப் போல் விழுங்து கிடந்த காட்சி பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது. இலைகள் யாவும் உதிர்ந்தும், பட்டைகள் உரிந்தும் ஒரு அலங்கோலமான நிலையில் பூவரசு அசை வற்றுக் கிடந்து.

சில நாட்கள் சென்றன. அந்த ஈரளிப்பான நிலத்தில் புதிதாக குப்பை மேனிகள் வளர்ந்து எங்கும் பசுமை யைப் படரவிட்டுக்கொண்டிருந்தன.

ஒரு காலைப் பொழுதில் இளங்கதிரின் இதமான சூட்டில் பூரிப்புடன் நிமிர்ந்து நின்ற குப்பை மேனி யொன்று அருகிலே குப்புறப்படுத்திருந்த பூவரசு மரத்தின் அவல நிலையை அப்போதுதான் கண்டது.

மரணத்தின் இறுதித் தறுவாயில் இருக்கும் பூவரசு மரத்தின் ஈனக் குரலைக் கேட்டதும். அன்றைய அதன் ஆணவச் சிரிப்புதான் குப்பை மேனியின் நினைவுக்கு வந்தது.

“இப்போது பார்த்தாயா உன் நிலைமையை, பலத்தை மட்டுமே நம்பி எம்மையெல்லாம் எவ்வளவு இழிவு படுத்தினாய். இன்று நீ எப்போதுமே எழும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத அளவிற்கு விழுந்து விட்டாய். உனது அகங் காரமும் திமிரும் இப்போது எங்கே...? இனி மேலாவது உன் பெருமைத்தனத்தைக் குறைத்து ஏனையோரையும் மதிக்கக் கற்றுக் கொள்" என குப்பைமேனி கூறியதும் பூவரசால் ஒன்றும் கூற முடியவில்லை. இருந்தும் முக்கி முனகியவாறு

"அது சரி நீதான் வெயிலில் அழிந்துபோய்விட்டாயே இப்போது எப்படி இவ்வளவு செழிப்பாக உள்ளாய்" என தனது சந்தேகத்தைக் கேட்டது.

"நான்தான் பெரிதானவன் என்ற எண்ணம் எனக்கு ஏப்போதும் ஏற்பட்டதில்லை. ஏனையோரின் உணர் வுகளை மதித்து யாரிடமும் பகைமை பராட்டாமல் பணிந்து வாழ்ந்து வருபவன். எனக்கு வாய்ப்பான சூழல் வரும்போது எழுந்து வருகின்றேன். உன்போல் அகம்பாவத்துடன் வாழ்ந்தால் இறுதி முடிவு அழிவா கத்தான் இருக்கும்" என்ற குப்பைமேனியின் அறிவு ரையைக் கேட்டவாறே பூவரசு மரம் தனது இறுதி மூச்சைவிட்டது.

**(தினகரன் - 30.11.2008)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம்



கறுப்புத் திரையால் போர்த்தப்பட்டது போல வானத்தை மூடியிருந்தது கருமுகில் கூட்டம். இதோ பெருமழை கொட்டப்போவது போன்ற ஒரு அமுக்க மான சூழலில் அப்பிரதேசம் காணப்பட்டது. பறவைகளும், ஏனைய விலங்கினங்களும் நிலைமையை உணர்ந்து பாதுகாப்பைத் தேடி வேகமாக தங்கள், தங்கள் உறைவிடங்களை நாடிக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்த ஒரு சிறிய குளத்தில் பல தவளைகள் பாய்வதும். அதில் நீந்துவதும், மாக்... மாக்... எனக் கத்துவதுமாக ஒரே குதூகலமாகக் காணப்பட்டன. மழைக்காலம் என்றால் தவளைகளுக்குக் கொண் டாட்டம்தானே! அதனால்தான் அதனை வர வேற்க இவ்வளவு உற்சாகமாக அங்கிருந்த அத்தனை தவளை களும் சத்தமிட்டு சந்தோசத்தை வெளிக்காட்டிக் கொண்டிருந்தன.

இத்தனை ஆரவாரத்திற்கு மத்தியிலும் அருகிலிருந்த மரத்தில் அமைந்திருந்த ஒரு கூட்டிற்குள் இருந்த குருவிகள் மழையின் வருகையை நினைத்து மிகவும் பயந்த நிலையில் ஒடுங்கியவாறு படுத்திருந்தன.

மழை நீரிலிருந்து தன் குஞ்சுகளைப் பாதுகாக்க அவைகளை இரு சிறகுகளுக்கும் இடையில் அணைத் துக் கொண்டிருந்தது தாய்குருவி. அதன் அரவணைப் பிலும், இதமான உடல் சூட்டிலும் குஞ்சுகள் யாவையும் மறந்து கண் துயிலத் தொடங்கின.

மழைத் தூறல் மெல்ல மெல்லவாக ஆரம்பித்ததும் தாய்க் குருவியின் உடலில் மழைநீர் சொட்டுச் சொட் டாகத் தெறித்து வடியத் தொடங்கியது. ஆனாலும் தனது குஞ்சுகளுக்கு அவை படாதவாறு தன்னை சுதாகரித்து அதற்கேற்ப அசைந்துகொண்டிருந்தது.

ஆனால் இவை அனைத்திற்கும் எதிர்மாறாக தவளை களின் ஆரவாரமும் உற்சாகமும் முன்னரை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாயின. மழையைக் கண்டதும் ஏற்பட்ட அளவு கடந்த ஆனந்தத்தினால் உரத்து பாடவும் தொடங்கின. இவற்றை பார்த்துக் கொண்டிருந்த குருவிக்கு மிகவும் சங்கடமாகிவிட்டது.

மழையினால் தான்படும் அவஸ்தைகள் ஒரு புறமிருக்க தவளைகளின் காட்டுச் சத்தத்தினால் தன் குஞ்சுகள் விழித்துவிடுமோ என்ற கவலையும் குருவிக்கு ஏற்பட்டது. எனவே தவளைகளைப் பார்த்து சற்று பணிவுடன்,

"தவளையாரே, மழை என்றால் உங்களுக்கு இவ்வளவு மகிழ்ச்சியா? எங்களுக்குத்தான் சிரமமாக இருக்கின்றது. மிகவும் நனைந்து குளிரினால் நடுங்கி அவதிப்படுகின்றோம்" என்றது.

"அப்படியா, எங்களுக்கு மழை என்றால் திருநாள் காலம்தான். அதுதான் ஒரே கும்மாளமிட்டு மகிழ்ச்சியாக அதனை வரவேற்கின்றோம்." எனப் பெருமையுடன் ஒரு தவளை கூறியது.

"அது சரிதான் ஒவ்வொருவருக்கு ஒரு காலம். ஆனால் உங்கள் மகிழ்ச்சியை மற்றவர்களுக்கு சிரமமில்லாமல். வெளிக்காட்டலாம்தானே!" என ஆதங்கத்துடன் குருவி கூறியது.

"அதெப்படி எங்கள் சந்தோசம் உங்களுக்கு கஸ்டத்தைக் கொடுக்கிறது? உங்களுக்கு எம்மீது பொறாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதான் அபாண்டமாகப் பழிசுமத்து கிறீர்கள்......" எனத் தவளை சற்று ஆவேசமாகக் கூறியது.

"கோபப்படாதீர்கள் தவளையாரே, இந்த மழையையும், குளிரையும் எங்களால் தாங்க முடியும். எமது குழந்தைகளுக்கு இக்காலநிலை ஒத்துவராது. அதனால் எம் இறக்கைகளால் மூடி அதனை ஒருவாறு உறங்கச் செய்துள்ளோம். இந்த நிலையில் உங்கள் ஆரவாரமும், கூச்சலும் அவைகளை விழிப்படையச் செய்து விடுமல்லவா? அதனால்தான் உங்கள் கூச்சலை சற்றுக் குறையுங்கள் எனக் கூறினேன்" என்று குருவி கூறியது.

"ஆடுவதும், பாய்வதும், சத்தமிட்டுப் பாடுவதும் எங்கள் சுதந்திரம், எமது உரிமையில் தலையிட உமக்கு அதிகாரமில்லை. இதைக்குறைகூறவோ, கட்டுப்படுத்தவோ யாராலும் முடியாது. நீ வேண்டுமானால் வேறு இடத்திற்குப் போகலாம், இதைப் பற்றி எம்மிடம் இனிமேல் எதுவும் பேசவேண்டாம்" எனக் கூறிவிட்டு குளத்தில் தாவி அதில் தத்தித் தத்தி விளையாடியது.

தவளையின் சீற்றமான பேச்சைக் கேட்டு குருவி மௌனமாகி சோகத்துடன் தலை கவிழ்ந்தது. சிறிது நேரத்தில் குளத்தின் அருகாமையில் புடைத்துப் படர்ந் திருந்த கோரைப்புல்லின் அடர்த்தியில் இருந்து ஒரு பெரிய நீர்ப்பாம்பொன்று சலசலத்தவாறு நீருக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கி வந்தது. இதனைக் கண்ட தவளைகள் கத்தி சத்தமிட்டவாறு கரைப்பகுதியை நோக்கி பாய்ந்து ஓடின. நீர்ப்பாம்பு துரத்தித் துரத்தி அவைகளை வேட்டையாடியது.

அந்தோ பாவம்...! பாம்பின் பிடியில் ஒரு தவளை சிக்கி கீ... கீ... கீ... என மரண ஓலமிட்டது. இதனால் ஏனைய தவளைகளும் பயந்துபோய் மரத்தில் ஏறியும், பொந்துகளில் பதுங்கியும் ஒளிந்து கொண்டன. சற்று நேரம் எவ்வித சத்தமுமின்றி அவ்விடம் மயான அமைதியில் காணப்பட்டது.

இவை அனைத்தையும் கூட்டுக்குள்ளிருந்து அவதானித்துக் கொண்டிருந்த குருவி தவளைகளின் அவலமான நிலையைப் பார்த்து மனதிற்குள்ளாக அனுதாபப்பட்டது. அப்போது தன்னுடம் விவாதித்த தவளை அருகிலுள்ள மரக்கிளையில் ஒட்டியவாறு மூச்சுப் பேச்சின்றி நடுங்கியபடி இருப்பதை கண்ட குருவி,

"தவளையாரே கொஞ்ச நேரத்திற்கு முன் எவ்வளவு விதண்டாவாதமாகப் பேசினீர். எமது வேதனையைக் கூட பொருட்படுத்தாமல் எங்கள் சுதந்திரம், உரிமை என்றெல்லாம் உரத்த குரலில் கும்மாளமிட்டீரே, இப்போது எப்படி..." என ஏளனமாகக் கேட்டது.

"குருவியே, சத்தமிட்டு என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே. உன்னிடம் மன்றாடிக் கேட்டுக் கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறேன்" எனக் கெஞ்சியது தவளை.

"உன்னைக் காட்டிக் கொடுப்பதால் எனக்கு என்ன இலாபம்? நுணலும் தன் வாயால் கெடும் எனப் பெரியோர் சும்மாவா சொன்னார்கள். உனது அளவு கடந்த ஆரவாரமே உன்னைக் காட்டிக்கொடுத்து விட்டது. சுதந்திரம் என்பது நமது உரிமையை மற்ற வர்களின் வாழ்க்கைக்கு குந்தகம் இல்லாதவாறு பயன்படுத்துவதில்தான் தங்கியுள்ளது. அத்தகைய புரிந்துணர்வுகள் மூலம்தான் எல்லோர் மத்தியிலும் உண்மையான உறவுகள் உருவாகும்" எனக் கூறிய வாறு குருவி தன் குஞ்சுகளை இறக்கைகளால் இறுக அணைத்துக் கொண்டது.

**(தினகரன் - 10.05.2009)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியதி...



அடர்ந்து படர்ந்திருந்த கானகத்தின் மத்தி யில் மரங்களின் வேரடிகளைத் தொட்டுத் தழுவிய வாறு காட்டாறு சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது. கதிரவன் கீழ்த்திசையில் உதயமாகி காலைப் பொழு தும் கழிந்தவேளை, குருவிகள் கீச் கீச் சென்று கத்தி யவாறு மரங்களிலே தாவி விளையாடிக் கொண்டி ருந்தன. மந்திக் கூட்டங்கள் அங்குமிங்கும் பாய்ந்தும் ஓடியும் திரிந்தன. ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றில் கயல் மீன்கள் துள்ளியபோது சூரியனின் கதிர்கள் அதில் பட்டுத் தெறித்ததால் தகதகவென வெள்ளிக் கட்டியாய் அது மின்னியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றின் ஓட்டத்திற்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் நெடிதாய் வளர்ந்திருந்த மூங்கில் ஒன்று நீருக்குள் விழுந்து அசைந்தபடி மிதந்துகொண்டிருந்தது. நிலத்தில் பதிந்து போன வேரின் அழுத்தத்தில் மூங்கிலானது அந்த இடத்திலேயே இருந்து நீரோட்டத்தின் வேகத்தை எதிர்த்தபடி வேதனையுடன் ஆடி அசைந்து கொண்டிருந்தது.

மூங்கில் நுனியின் குருத்துக்கள் நீருக்குள் அமிழ்வதும் எழுவதுமாக மூச்சுத் திணறிக் கொண்டிருந்தன. இதனை அவதானித்த கயல் மீன் ஒன்று அக்குருத்தினை ருசிபார்க்கும் ஆசையில் பாய்ந்து பிடித்துக் குதறியது. மீனின் வாயில் அகப்பட்ட மூங்கிலின் குருத்து கிழிந்து தொங்கியது. இதனால் மூங்கிலின் வேதனை மேலும் அதிகமாகியது. கயல் மீனோ மூங்கிலின் குருத்தைப் பதம் பார்ப்பதை விடுவதாயில்லை. மூங்கில் கெஞ்சுதலுடன்,

"கயல் மீனே, நானோ ஏற்கனவே இந்த ஆற்றில் அடிபட்டு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். இந்நிலையில் நீயும் என் உடலை உண்பதற்காக காயப்படுத்துவது பாவமில்லையா?" எனப் பரிதாபமாகக் கேட்டது.

"நீ என்ன கதைக்கின்றாய் நெடிய மூங்கிலே, நானா உன்னிடத்தைத் தேடி வந்தேன்? நீதானே என் வாழ்விடத்திற்கு வந்து எனது பசிக்கு உணவாகக் கிடைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கின்றாய். இது ஒன்றும் புதிதல்லவே, உலகில் எங்கும் எப்போதும் நடக்கும் விடயம்தானே..." என அலட்சியமாகக் கயல்மீன் கூறியது.

"என்னை உன் பசிக்கு இரையாக்குவதற்கு நீ கூறும் இந்த நியாயம் உனது சுயநலமில்லையா? தயவு செய்து என்னை துன்புறுத்துவதை விட்டுவிடு" எனக் கெஞ்சியது மூங்கில்.

"இதோ பார். வலியாருக்கு எளியார் அடிமைப்படுவதும், ஒன்றை அழித்து இன்னொன்று உயிர் வாழ்வதும் உலக நியதி இது உனக்குத் தெரியாதா?" எனச் சாதாரணமாகக் கேட்டபடி கயல் மீன் மூங்கில் குருத்தினை தொடர்ந்து கடித்துக் கொண்டிருந்தது.

இப்படியே சிறிது நேரம் போனதும் அந்த வழியாகப் பறந்து வந்த நாரைக் கொக்கொன்று ஆற்று நீரில் மிதந்து கொண்டிருந்த அந்த மூங்கில் மீது அமர்ந்து ஒன்றைக்காலில் நின்றது. கயல் மீனும் இதனைக் கவனியாது. தன்பாட்டில் பாய்ந்து பாய்ந்து அதன் வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தது. இதை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்த நாரை ஒரு சந்தர்ப்பத்தில் நீருக்கு மேலாகப் பாய்ந்து மூங்கில் குருத்தைக் கடிக்க முயற்சித்த கயல்மீனை தன் கூரிய அலகினால் கொத்தித் தூக்கியவாறு பறக்கத் தொடங்கியது.

நாரையின் அலகிற்குள் அகப்பட்ட கயல்மீன் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் நிச்சயம் என உணர்ந்து ஈனக்குரலில் கத்தித் துடித்தது. அப்போது மூங்கிலைப் பார்த்து,

"ஏ... மூங்கிலே உன்னைத் துன்புறுத்தியதற்காகத் தானே இந்த நாரைக்கு நீ அமர இடம் கொடுத்து என்னை அழிப்பதற்கு உதவியிருக்கின்றாய்" எனக் கோபத்துடன் கூறியது.

"கயல் மீனே, நீ சொல்வது தவறு. நாரையின் உணவுக்கு நீ தேவை அதன்படி தனது பசிக்கு அது உன்னைப் பயன்படுத்துகின்றது. உனது பாசையில் கூறுவதானால் இதுதான் உலக நியதி இதனை யாரும் மாற்ற முடியாது." என்றவாறு ஆற்றில் அசைந்தபடி மூங்கில் தன்பாட்டில் மிதந்து கொண்டிருந்தது.

(தினகரன் 08.06.2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித குணம்



ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்க விருப்பமில்லாத மனநிலையில் ஒரு எலும்புத் துண்டுக்காக இரு தெருநாய்கள் மிகவும் ஆக்ரோஷமாக சண்டையிட்டுக்கொண்டிருந்தன. அவைகள் பிடித்த சண்டையில் அந்தத் தெருவே சிறிது நேரம் அல்லோல கல்லலப்பட்டது. வீதியால் பயணித்த பலர் ஒரு ஓரமாக நின்று இச்சண்டையை வெகு சுவராஸ்யமாகவும், மகிழ்ச்சியோடும் அவதானித்துக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றையொன்று கடித்தும், கட்டிப் புரண்டும், பாய்ந்தும் தமது வெற்றியை நிலை நாட்டுவதற்காக அந்நாய்கள் நடத்திய போராட்டத்தால் அத்தெரு எங்கும் ஒரே புழுதி மண்டலமாகவே காணப் பட்டது. வாயை அகலத் திறந்து பற்களை விரித்தபடி உறுமிய அந்நாய்களின் கோரத் தோற்றம் அங்கு நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது.

இவை எதனையும் பொருட்படுத்தாது இச்சண்டை யில் வெற்றியடையும் ஒரே எண்ணத்துடன் அவ்விரு நாய்களும் தொடர்ந்து உக்கிரமாக மோதிக் கொண்டி ருந்தன.

இதனை கூட்டத்தோடு கூட்டமாக பார்த்துக் கொண் டிருந்த ஒரு சிறுவன் கல்லொன்றைக் கையிலெடுத்து துணிச்சலுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்த அந் நாய்களை நோக்கி வீசியதும் அவ்வளவு நேரமும் ஆக்ரோஷமாக மோதிய நாய்கள் அவ்விடத்தை விட்டும் மிகவும் வேகமாக ஓடத்தொடங்கின.

சற்று நேரத்தில் அத்தெரு இயல்பு நிலைக்குத் திரும்பி யதும் மீண்டும் இரண்டு நாய்களும் அவ்விடத்திற்கு ஒன்றாக வந்து எதுவுமே நடவாததுபோல ஒன்றை யொன்று நாக்கினால் தடவி மகிழ்ச்சியுடன் விளை யாடிக் கொண்டிருந்தன.

இதனை அங்கிருந்த அனைவருமே வியப்போடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கினர். "என்ன ஜென்மமடா இது, இவ்வளவு நேரமும் வெறிபிடித்ததைப்போன்று சண்டையிட்டு விட்டு இப்போது எவ்வளவு உறவாக இருக்கிறது..." என ஒருவர் தனக்குள்ளாகவே கூறிக்கொண்டார்.

அங்கு நின்றிருந்த ஏனையோர்களும் ஆச்சர்யத்துடன் அந்நாய்களின் நடவடிக்கைகளை உற்றுநோக்கினர்.

இவற்றையெல்லாம் நன்கு அவதானித்த அந்நாய்கள் தங்களைப் பற்றித்தான் அம்மனிதர்கள் ஏதோ முணு முணுக்கின்றனர் என்பதை உணர்ந்துகொண்டன.

"பார்த்தாயா அந்த மனிதனை, நாம் இப்போது உற வாக இருப்பதைப் பிடிக்காதவன் போல நம்மையே முறைத்துப் பார்த்து விட்டுப் போகின்றான்" என ஒரு நாய் கூறியது.

"ஆமாம் நானும் அவதானித்தேன், நமது சண்டையை நன்றாக இரசித்தவர்கள் நாம் ஒற்றுமையானதும் ஏதோ விரும்பத்தகாத ஒன்றைச் செய்ததைப்போல வெறுப்புடன் பார்க்கின்றார்களே." என மற்ற நாய் கவலையுடன் பதில் கூறியது.

"மனிதர் குணமே அதுதானே! கோபம், பகை ஏற்பட் டால் அதனை மனதிலே வைத்து எப்போதும் பழி வாங்கும் எண்ணத்திலேயே இருப்பார்கள் விட்டுக் கொடுப்பு, மன்னிப்பு என்பதெல்லாம் அவர்களிடம் அறவே இல்லை. பகைமையை வளர்த்து பழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கும் குணத்துடன் வாழும் இவர்களிடம் எப்படி சமாதானம் வரும்?" என ஆவேசமாகப் பேசியது அந்த நாய்.

"அப்படியா ... அதனால்தான் நாம் சண்டை முடிந்து சமாதானமான பிறகும் அவர்கள் நம்மைப்பார்த்து ஆச்சர்யப்படுகின்றார்கள் போல .." என்றது மற்ற நாய்.

"அது மட்டுமல்ல, நம் இனத்தை நன்றிக்கு மட்டும் தான் எடுத்துக்காட்டாக இம்மனிதர்கள் உதாரணம் காட்டுகிறார்கள். அவர்களிடம் இந்த நன்றியுணர் வோடு எந்த நல்ல குணமுமே இல்லை. எல்லா உயிரி னங்களையும் விட மனிதனே மேலானவன் எனக் கூறுப வர்கள் குணத்தில் மட்டும் விலங்குகளை விட கீழான வர்களாகவே உள்ளார்கள். சரி இவர்களைப் பற்றி நாம் பேசினால் நமக்கும் மனித குணம் வந்துவிடும் வா இங்கிருந்து போய்விடுவோம்." எனக் கூறியபடி தூரத்தில் தெரியும் குப்பை மேட்டை நோக்கி அவ்விரு நாய்களும் வேகமாக ஓடத் தொடங்கின.



**(பிரதேச கலாசார விழா மலர் "முத்து" - 2014 )**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றம்



காய்ந்த மரக்குச்சிகளாலும் தும்பு, களிமண்ணாலும் மிகவும் கச்சிதமான முறையில் வட்ட வடிவமாக அமைக்கப்பட்டிருந்த காகக் கூட்டினை உயர்ந்த தென்னை மரமொன்றின் உச்சியிலிருந்தபடியே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது குயில் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த காகக் கூட்டினுள் முட்டைகள் இருந்தன. அடிக்கொரு தடவை தாய்க்காகம் வந்து அதன் மீது அமர்வதும் அம் முட்டைகளை தன் சிறகுகளினால் அரவணைத்தபடி இருந்துவிட்டு பறந்து செல்வது மாய் இருந்ததை ஒரு ஏக்கத்துடன் அக்குயில் பார்த்துக் கொண்டிருந்தது.

அந்த நான்கு முட்டைகளுள் ஒன்று தன்னுடையது என்பதை அந்த காகத்தால் அறிந்துகொள்ள முடியாமல் போய்விட்ட அதன் முட்டாள்தனத்தை எண்ணி குயில் தனக்குத் தானே பெருமைப்பட்டுக் கொண்டது.

காகத்தைப்போல் உருவத்திலும் நிறத்திலும் ஒத்த தன்மையுடைய தனக்கு ஏன்தான் இறைவன் சொந்த மாக கூடுகட்டி அடைகாத்து குஞ்சுகளுடன் குடும்ப மாய் வாழும் சந்தர்ப்பத்தைக் கொடுக்காமல் விட் டானோ? என மனதுக்குள் வருந்தியது.

அழகான குரலை தனக்குத் தந்த இறைவன் இக் குறையை மட்டும் வைத்துவிட்டானே... என தன் விதியை நொந்து கொண்டது.

ஆனாலும் காகத்தின் உதவி மூலம் தனது சந்ததியை விருத்தியாக்கும் ஒரு வழியையும் இறைவன் உருவாக்கிக் கொடுத்ததை எண்ணி குயில் திருப்திப் பட்டது. அதற்காக மனதுக்குள் காகத்தை நன்றி யுடன் நினைத்துக் கொண்டது. ஆனால் திருட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனமாக காகத்தின் கூட்டிற்குள் முட்டையிட்ட தன் குற்ற உணர்வை எண்ணி குயில் மன வேதனைப்பட்டாலும் இந் நிலைமை தனக்கு தவிர்க்க முடியாதது என்பதை நினைத்து ஆறுதலடைந்தது.

அப்போது கூட்டிற்குள் முட்டைகளை அடை காத்துக் கொண்டிருந்த காகம், குயில் தன்னை நீண்ட நேரமாக அவதானிப்பதை அறிந்து.

"என்ன குயிலாரே... ஒரே சோகமாக இருக்கிறீர் ? உமக்குத்தான் எம் போன்று வீடுகட்டி குடும்பம் நடத்த முடியாதென்ற கவலையோ?" என நக்கலாக கேட்டது. குயிலும் ஒன்றும் பேசாமல் இருந்துவிட்டு சிறிது நேரத்திற்குப் பின்

"காகமே, உலகில் ஒவ்வொருவருக்கும் ஒரு குறை இருக்கும். அதுபோல எமக்கும் இப்படி ஒரு குறையை ஆண்டவன் வைத்துவிட்டான். என்ன செய்வது?" என விரக்தியுடன் கூறியது.

"என்ன இருந்தாலும் குடும்பமாய் இருந்து குழந்தை களுடன் வாழும் பாக்கியம் உமக்கு இல்லைதானே... ஆனால் எனக்கொரு சந்தேகம் எப்படி உங்கள் சந்ததி பெருகு கின்றது..." என ஒரு கேள்வியைக் கேட்டதும் குயி லுக்கு தர்மசங்கடமாகிவிட்டது.

அந்தக் கூட்டிற்குள் உள்ள முட்டைகளில் ஒன்று தன்னுடையது அல்ல என காகத்திற்குத் தெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தால் அதற்குக் கோபம்வந்து ஒரு வேளை இப் போதே அதனை உடைத்துவிடும் என்ற அச்சம் குயி லுக்கு ஏற்பட்டது. எனவே உண்மையைக் கூறாமல்,

"எங்கள் பரம்பரையும் ஏதோ ஒரு வகையில் இந்த உலகத்தில் விருத்தியாவதற்கு அந்த இறைவன்தான் வழியமைத்துள்ளான்" என புதிர்போட்டு பேசிய குயிலின் பதிலாள் காகத்திற்கு ஒரே குழப்பமாக இருந்தது.

"போதும் குயிலாரே உமது பேச்சு, உமது சந்ததி விருத்தியில் ஏதோ மர்மம் இருப்பதாகவே எனக்குத் தெரிகிறது. உம் போன்ற மயக்கும் குரல் படைத்தவர் கள் செய்யும் சாகசங்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்". எனக் கடுப்புடன் காகம் கூறியதும்.

"நீர் என்ன வேண்டுமானாலும் கூறு. ஒரு காலத்தில் என்னைப்பற்றிய உண்மை உனக்கு நிச்சயம் தெரியத் தான் போகிறது. ஒரு வகையில் நாம் உறவினர்கள்தான் அதனால்தான் நான் உன்னோடு உறவாக இருக்க ஆசைப் படுகிறேன்." எனக் குயில் பணிவோடு கூறியது.

" ஏய் குயிலே! நீ வேறு நான் வேறு! ஒரே நிறமாக இருப்பதால் மட்டும் உறவாக முடியாது உன்னைப் பற்றிய உண்மை எனக்குத் தெரிய வேண்டிய அவசிய மில்லை. உனது பரம்பரையை பற்றிய வரலாறை சொல்ல முடியாத நீ என்னை ஏமாற்றி உறவாட முடியாது என் முன்னால் நில்லாமல் போ" என காகம் சத்தமிட்டுக் கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி எப்போதாவது என்னைப் பற்றிய உண்மை தெரிய வரும்போது நீ நிச்சயம் வருத்தப்படுவாய்" எனக் கூறியவாறு ஆகாயத்தைநோக்கி பறந்தது குயில்.

காலங்கள் நகர்ந்தன. காகத்தின் கூட்டிலிருந்த நான்கு முட்டைகளில் இருந்தும் குஞ்சுகள் வெளிவந்ததைக் கண்டு தாய்க் காகம் மகிழ்ச்சியடைந்தது. அங்குமிங் கும் பறந்து குஞ்சுகளுக்கு பொருத்தமான உணவுகளை தன் அலகுகளில் கொண்டு வந்து அது ஊட்டியது. அக் குஞ்சுகளும் அகன்ற வாயைத் திறந்து அதனை உண்டு மகிழ்ந்தன.

நாட்கள் செல்லச் செல்ல குஞ்சுகளின் உடல்களில் இறகுகள் முளைத்து தாயுடன் சிறிய தூரங்களுக்குப் பறந்து போவதற்கான துணிவுபெற்றன. குஞ்சுகள் பசி வரும்போது கா ..கா.. என கத்தும் சத்தத்தில் ஒரு குஞ்சிடம் மட்டும் ஏதோ ஒரு மாற்றம் தெரிந்ததைக் கண்டு தாய்க் காகத்தின் மனதில் சந்தேகம் ஏற்பட்டது.

இதை சில நாட்கள் அவதானித்தபோது அதன் குரல் தனது இனத்தின் குரலாக இல்லாமல் கீ ... கீ... என ஒலித்ததையும் கண்கள் நீல நிறமாக இருந்ததையும் அறிந்தபோதுதான், தான் ஏமாற்றப்பட்டதை காகம் அறிந்து கொண்டது.

முன்பு ஒருமுறை குயில் தன்னிடம் புதிர் போட்டு பேசியதன் அர்த்தத்தை இப்போதுதான் காகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து கொண்டது. குயில் அவ்வேளையில் தன் பலவீனத்தை எண்ணி நகைத்தாடியபோது அதன் தந்திரத்தை அறியாமல் இருந்ததையிட்டு காகம் வெட்கப்பட்டது.

குயிலால் தான் ஏமாற்றப்பட்ட கோபத்தில் அதன் குஞ்சை காகம் கொத்தி விரட்டியடித்தபோது அக் குயில் குஞ்சு கீக்.... கீ.... என கத்தியவாறு வானத்தில் தன் சிறகை விரித்து வெள்ளோட்டமிட்டு பறக்கத் தொடங்கியது.

ஒருவரைப் பற்றி நன்கு அறியாமல் அவரை இழிவு படுத்தி நம்மை பெருமைப்படுத்தும் போது எப்போ தாவது உண்மை தெரியும் சந்தர்ப்பத்தில் நாமே ஏமாளியாகி அவமானப்படுவோம் என்ற விடயத்தை காகம் இப்போதுதான் அறிந்து கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபேதம்



ஓர் அமாவாசை நாளின் முன்னிரவு! தொட்டால் கைகளில் ஒட்டிவிடும் போன்ற மை இருள். பூமி எங்கும் கறுப்புப் புகையாய் பரவிக் கிடந்தது. தன்னை யாரும் அசைக்க முடியாது என்ற ஒரு இறுமாப்பில் இருள் அரசனால் அப்பிரதேசம் முழுதும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தில் மின்னிய பல்லாயிரம் விண்மீன்களின் வெளிச்சத்தினால் கூட இருட்டின் ஆதிக்கத்தை விலக்க முடியவில்லை. தங்கள் இயலாமையை மறைக்கமுடியாமல் அவைகள் ஒன்றையொன்று பார்த்து கண்சிமிட்டிக் கொண்டிருந்தன.

அந்த இருள் தேசத்தில் அகப்பட்ட உயிரினங்கள்கூட பயப்பீதியில் உறைந்துபோயிருந்தன. இதனைக் கண்ட இருட்டுக்கு இன்னும் பெருமிதம் ஏற்பட்டது. தனது வல்லமையைப் பற்றி தனக்குத்தானே பெருமைப்பட்டுக்கொண்டது.

“என்ன நட்சத்திரங்களே உங்கள் வெளிச்சத்தின் வீரியம் இவ்வளவுதானா..? வேண்டுமானால் எல்லோரும் இன்னும் நெருங்கிவந்து என்னை அகற்ற முயற்சித்துப் பாருங்களேன்..” என சவால் விடும் தோரணையில் வானத்தில் மின்னிக்கொண்டிருந்த உடுக்களைப் பார்த்து ஏளனமாகக் கேட்டது.

எங்களின் சக்தியை அறியாத முட்டாளாக அல்லவா இந்த இருள் எம்மிடம் சவால் விடுகின்றது. இப்படியான அறிவிலிகளிடம் பேசிப்பயனில்லை! பட்டால்தான் முட்டாள்களுக்குப் புத்தி வரும்! எதற்கும் பொறுமையாக இருப்போம்! என நட்சத்திரங்கள் தமது மனதிற்குள் நினைத்துக் கொண்டன.

நடுநிசியையும் தாண்டிய வேளை! இருளின் ஆதிக்கம் அப்பிரதேசம் முழுதும் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாக வியாபித்துக் காணப்பட்டது.

"என்ன மௌனமாக இருக்கின்றீர்கள்... என்னுடன் தோற்றுவிட்டதை இப்போதாவது ஏற்றுக்கொள்வீர்களல்லவா..? என இறுமாப்புடன் கேட்டது இருள்.

"இருள் அரக்கனே நாம் மௌனமாக இருப்பது எமது இயலாமையால் அல்ல. உன்போன்ற தீய குணமுடையவர்களுடன் மோதுவதில் பயனில்லை என்பதாலேயே இவ்விடத்தினில் நிற்கின்றோம். உனது பார்வையில் நாம் சிறியவராக இருந்தாலும் எமது ஆற்றலும் சக்தியும் என்றுமே மாறாது. இன்னும் சிறிது நேரம் சென்றால் தோற்றது யார் என்பது தெரிந்துவிடும்.." என சற்று கோபமுடன் தன் ஒளியை உமிழ்ந்தவாறு கூறியது நட்சத்திரம்!

"என்னுடைய பலத்தை நான் இப்போது நிரூபித்துக் காட்டியுள்ளேன். ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் சேர்ந்தும் என்னை இவ்விடத்திலிருந்தும் அகற்ற முடியவில்லை. இதை மறந்து உங்கள் சக்தியைப் பற்றி பெரிதாகப் பிதற்றுகின்றீர்களே! இது உங்களுக்கே வெட்கமாகப்படவில்லையா" என இருள் ஆக்ரோஷமாகப் பேசியது.

"ஏய் பேய் இருளே, அதிகமாக அலட்டிக் கொள்ளாதே இன்னும் சிறிது நேரம் பொறுத்துப்பார் உன் சுயரூபம் வெளுத்துவிடும்! அப்போது உன் நிலைமை எப்படி இருக்கப்போகின்றது என்பதை அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வாய்.." என்ற நட்சத்திரத்தின் பதிலைக் கேட்டு இருள் அலட்சியமாகச் சிரித்தது.

அவ்வேளை கீழ்த்திசையின் அடி வானத்திலிருந்து மெல்லிய ஒளிக்கீற்றை கசியவிட்டவாறு ஆதவன் மெல்ல மெல்ல மேலே வருவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப்பார்த்த நட்சத்திரங்களோ ஆனந்தத்தால் மின்னுவதைக் குறைந்து கதிரவனை வரவேற்க ஆயத்தமாகின. எதிர்பாராத இந்த நிகழ்வு இருள் அரக்கனை கதிகலங்கச் செய்தது. தனது ஆதிபத்திய உரிமைக்கு ஆபத்து நேர்ந்து விடுமோ என்ற அச்சத்தினாலும், பயத்தினாலும் அது வாயடைத்துப் போனது.

"பார்த்தாயா இருளே.. உனக்கு அழிவு நெருங்கி வருகிறது. உன்னை யாராலும் அழிக்க முடியாது. என திமிர்பிடித்து அதிகார ஆணவத்துடன் பேசினாயே இப்போது உன்னை அகற்ற எங்களில் ஒருவன் அதோ கீழிருந்து உயர்ந்து வருகிறான். இத்தோடு உனது இருண்ட ஆட்சி அதிகாரம் இந்தப் பிரதேசத்திலிருந்தே அழியப்போகிறது.." எனக்கூறிய படியே நட்சத்திரங்கள் யாவும் மெதுவாக மறையத் தொடங்கின.

கதிரவன் இன்னும் மேல்நோக்கி உயர்ந்து வந்ததும் இருள் தன் பிடியை படிப்படியாக அவ்விடத்திலிருந்தும் அகற்றத் தொடங்கியது. சிறிது நேரத்தில் கறுப்புப் போர்வையாகப் போற்றப்பட்டிருந்த இருளின் ஆதிக்கம் அகன்று அப்பிரதேசமெங்கு ஒளியால் துலங்கி உயிர்பெற்றது.

அந்த சூரிய ஒளியில் கரைந்துபோன இருள் தனது அறிவீனத்தை எண்ணி அப்போதுதான் வருந்தத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தரமில்லாத வாழ்வில் கிடைக்கும் சந்தர்ப்பத்தையும், பலத்தையும் வைத்து தாமே சகல சக்தியுமுடையவன் எனக் கருதுபவர்களுக்கு இறுதியில் அழிவே ஏற்படும், இதனை உணர முடியாத தனது அபோதத்தைப்பற்றி வெட்கப்பட்டு அவ்விடத்தை விட்டும் இருள் வேகமாக அகலத்தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்தி



மஞ்சள், சிவப்பு, வெள்ளை, ஊதா எனப் பல வர்ணங்களிலும் அத்தோட்டத்தில் உள்ள செடிகளில் மலர்கள் பூத்து வண்ணமயமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. பார்ப்பவர் கண்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் அவைகளின் அழகு மிகைத்துக் காணப்பட்டது.

எல்லோருமே தன் எழிலை ஆசையாக இரசித்து மகிழ்வதைக் கண்டு மலர்கள் பெருமையால் உச்சி குளிர்ந்து ஆடி அசைந்தன. அங்கு வீசிய மெல்லிய காற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்களின் களிப்பை இன்னும் அதிகரிக்கச் செய்தது.

முன்னர் மொட்டாக இருந்து இப்போது மலர்ந்து மணம் வீசும் பருவத்திலுள்ள மலர்கள் யாவும் தமது தோற்றத்தையும், வனப்பையும் எண்ணி மகிழ்ச்சிய டைந்தாலும் இந்த அழகை அனுபவிக்க யார் வரு வாரோ என்ற ஏக்கமும், கவலையும் அவ்வப்போது அவைகளுக்கு ஏற்படத்தான் செய்தன.

அந்தப் பருவகாலத்தில் எல்லோருக்கும் ஏற்படும் ஆசை யும், தாபமும் மலர்களுக்கு மட்டும் விதிவிலக்கல்லவே.

கதிரவன் மறையும் அத்தாழவேளை. இளந்தென்றல் மெதுவாகத் தவழ்ந்து மலர்களைத் தடவிச்சென்று கொண்டிருந்தது. இந்த இரம்மியமான சூழலில் ரீங்...ரீங்...என ஒலியெழுப்பியவாறு பூச்சிகளும், வண்டு களும் அவ்விடத்தை வட்டமிடத் தொடங்கின.

இதனைக்கண்ட மலர்கள் யாவும் மிகவும் உற்சாக மடைந்து பூரிப்புடன் அவற்றை வரவேற்க ஆயத்த மாகின. அவ்வண்டுகளைத் தம் பக்கம் கவர்ந்திழுக்க சில மலர்கள் தம் அழகு நிறங்களை வெளிக்காட்ட வேறு சில மலர்களோ நறுமணத்தை அள்ளி வீசின.

மலர்களின் இந்த நடவடிக்கைகளால் பூச்சிகளும், வண்டுகளும் மனம்கிறங்கி அதனை நாடி மொய்க்கத் தொடங்கின. ஒரு மலரின் சுகந்த வாசனையால் சுண்டி இழுக்கப்பட்ட தேனீ ஒன்று பறந்துபோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மலரின் மேல் அமர்ந்து தன் நீண்ட குடம்பியை உள்ளே செலுத்தி தேனை உறிஞ்சத் தொடங்கியது. மலரும் மறுப்பேதுமின்றி அதற்கு இசைந்து கொடுத்தது.

மது உண்ட மயக்கத்தில் தேனீ தள்ளாடியவாறே அங்கிருந்து பறந்துசெல்ல முற்பட்டபோது மலருக்கு ஒரே ஏமாற்றமாக இருந்தது.

"என்ன தேனீயே... உன் பசி தீர்ந்தும் என்னைப் புறக் கணித்துவிட்டுப் போகிறாயே இது நியாயமா? என ஏக்கத்துடன் கேட்டது மலர்.

"ஆமாம், எனக்குத் தேவையானது உன்னிடம் இருந்தது அதனைப் பெற்றுவிட்டேன் இனி உன்னிடம் எனக்கு என்ன வேலை..." என தேனீ சாதா ரணமாகப் பதிலளித்தது.

"என்ன நீ கொஞ்சமும் இரக்கமில்லாமல் பேசுகி றாயே... இதனால் தான் உன்னைப்பற்றி மனிதன் கூட மலருக்கு மலர் தாவும் வண்டு என கேவலமாக உவமானம் செய்து பேசுகிறான்.. சரிபோகட்டும் என்னிடமுள்ள மதுவை அருந்தியதற்குப் பகரமாக எனக்குப் பாதுகாவலாகவேணும் நீ இருக்கக் கூடாதா..?" என ஏக்கத்துடன் கேட்டது மலர்.

"என்ன கூறுகிறாய், வெறுமனே பறந்து சென்ற என்னை உன் அழகைக்காட்டி, மணத்தை வீசி சுண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்தது நீதானே. இப்போது என்மீது குற்றம் சுமத்துகிறாய்..." என எகத்தாளமாகக் கூறியது தேனீ.

"அப்படியானால் என்னிடமிருந்து பெற்ற மதுவிற்கு நீ என்ன பதில் சொல்லப்போகிறாய்" எனக் கோபத்துடன் மலர் கேட்டது.

"மலரே, நீ எதிர்பார்ப்பதைவிட பெரிதாகவே நான் உனக்கு உதவிசெய்துள்ளேன். இதை உணராத தால் தான் இப்படிப்பேசுகிறாய் இந்த இடத்தை விட்டும் நகரமுடியாத உனக்கு வேறு மலர்களிலிருந்து மகரந்த மணிகளைக் காவிவந்து உனது இனப்பெருக்க விருத்திக்கே பேருதவி புரிந்துள்ளதை மறந்துவிடாதே. இதனை நான் உன்னிடமிருந்து பெற்ற மதுவுக்கு பிரதியுபகாரமாக நினைத்துக் கொள்" எனக் கூறிய வாறு தேனீ மலரைவிட்டும் பறக்கத் தொடங்கியது.

தாம் செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் ஏதாவது ஒரு காரணத்தைக்கூறி தப்பிக்கொள்ளும் இயல்பு எல்லோருக்கும் பொதுவானதாகவே உள்ளது. இந்த வகையிலேயே தேனீயின் நடத்தையும் அமைந்துள்ள தாகவே மலரும் நினைத்து வேதனைப்பட்டது. ஆனாலும் தேனீயின் தொடர்பால் ஏற்பட்ட கர்ப்பத்தின் காரணமான பூரிப்பில் மலர் யாவையும் மறந்து திருப்தியுடன் வாழ்வோம் என்ற உறுதியுடன் காற்றில் அசைந்தாடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடும்பி




கசங்கிப் போன ஆடையுடனும், பரட்டைத் தலையுடனும், தோளின் பின்னால் ஒரு பையைத் தொங்கவிட்டவாறு வழியில் கிடக்கும் பத்திரி கைகள், கிழிந்த பழைய கடதாசிகள், காகித அட்டை களைப் பொறுக்கி அப்பையினுள் போட்டவாறு வீதியால் நடந்து கொண்டிருந்தான் சிறுவன் ஒருவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று தெருக்களைக் கடந்ததும் அந்தப்பை கடதா சிகளால் நிறைந்து வழியத் தொடங்கியது.

அச்சிறுவன் மகிழ்ச்சியுடன் பழைய பொருட்கள் வாங்கும் வழமையாகச் செல்லுகின்ற அக்கடைக்குச் சென்று அதனை ஒப்படைத்து அதற்கான பணத்தைப் பெற்று மகிழ்ச்சியுடன் வெளியேறினான்.

கடைக்காரர் அந்தப் பையிலுள்ள பழைய காகிதங் களை ஒரு இடத்திலே கொட்டிக் குவியலாக்கினார். அங்கு ஏற்கனவே பழைய கண்ணாடிப் போத்தல் களும், பிளாஸ்ரிக் பொருட்களும் நிறைந்திருந்தன.

காகிதங்கள் கிழிந்து கசங்கியிருந்த அலங்கோலத் தைப் பார்த்ததும் கண்ணாடிப்போத்தல் ஒன்று வாய் விட்டுச் சிரிக்கத் தொடங்கியது. இதைப் பார்த்ததும் காகிதத்திற்கு அடக்க முடியாத சினம் பீறிட்டது.

" ஏய் கண்ணாடிப் போத்தலே என்னைப் பார்த்து ஏன் இப்படி ஏளனமாகச் சிரிக்கிறாய் .. நீயும் பழசு, நானும் பழசு இதிலென்ன பெருமை உனக்கு .." என காகிதம் ஆவேசமாகக் கேட்டதும் போத்தல் தன் சிரிப்பை அடக்கிக் கொண்டு,

" நான் சிரிப்பது பெருமையால் அல்ல உன் அவலட்ச ணத்தைப் பார்த்தே சிரிக்கின்றேன். உனக்கு ஒரு பெறுமதியைக் கொடுத்து ஏன் தான் இந்தக் கடைக் காரன் வாங்கினானோ தெரியவில்லை.." எனக் கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு போத்தல் "கல,கல" என மீண்டும் சிரிக்கத் தொடங்கியது.

"முதலில் உன் ஆணவச் சிரிப்பை நிறுத்து. நான் பழையதாகி உருக்குலைந்து போனாலும் எனது பெறுமதியையும், மதிப்பையும் உன்னால் அறிய முடியாது இல்லாவிட்டால் ஏன் என்னை விலை கொடுத்து வாங்க வேண்டும்?" என ரோசத்துடன் காகிதம் கேட்டதும்,

"ஓ..அப்படியா... சரி, என்னைப் பார். நான் எவ்வளவு பளபளப்பாகவும், உறுதியாகவும் புதிதாகவும் உள்ளேன். என்னைத் துடைத்து, துப்பரவாக்கினால் மீண்டும் புதிதாக மாறிவிடுவேன். இதனால் எல்லோருக்கும் நன்மைதானே உன்நிலை அப்படி இல்லையே" என அலட்சியமாகப் பேசியது போத்தல்.

"நீ கூறுவதை நான் ஏற்றுக் கொள்ளுகின்றேன். ஆனால் உண்மையில் நான், நீ கூறுவதைப்போல் சாதாரணமானவன் அல்ல. உன்னையும்விட நான் தான் அதிக பயன்மிக்கவன். அதுமட்டுமல்ல, என்னை அழித்தாலும் மீண்டும் மீண்டும் புதிய அவதாரம் எடுக்கும் பீனிக்ஸ் பறவையைப் போன்றவன்" என காகிதம் உரத்துக் கூறியது.

"சீ என்னிடம் கதையளக்காதே உன்னைத் தேவையில்லை என்றுதானே மனிதர்கள் தூக்கி வீசி இருக்கிறார்கள் நீ ஒரு குப்பை. ஆனால் இங்கு ஏன் வந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுதான் புரியவில்லை..." என்ற சந்தேகத்துடன் போத்தல் பேச்சை நிறுத்தியது.

"என்னைக் கேவலப்படுத்திப் பேசும் நீதான் குப்பைக் குப் போக வேண்டியவன் எப்படித்தான் நான் கசங் கிக் கிழிந்துஅசிங்கமாயிருந்தாலும் என்னை இயந் திரம் மூலம் திரும்பவும் மீள் உபயோகப்படுத்துவ தால் நான் அழிவே இல்லாத சிரஞ்சீவியே. இதை அறியாமல் உன்னைப் பற்றி வீண் பெருமைப்பட்டு என்னை அவமானப்படுத்துகிறாய்" எனக் காகிதம் கடுமையான தொனியில் கூறியது.

இப்படி இவர்கள் வாக்குவாதப்பட்டுக் கொண்டி ருந்த வேளையில் கடையின் உரிமையாளர் அங்கு வந்து குவிந்திருந்த காகிதத் தாள்களை ஒரு பையி லும், போத்தல்களை இன்னுமொரு பையிலுமாக கட்டத் தொடங்கினார். அப்போது அவரின் கையிலி ருந்து தவறிய போத்தல் ஒன்று கீழே விழுந்து உடைந்து சிதறியது.

உடனடியாக அக்கடைக்காரர் உடைந்த போத்தலின் துண்டுகளை பொறுக்கி எடுத்து வெளியில் உள்ள குப்பைத் தொட்டியில் போட்டார் இப்போது போத் தலின் நிலையைப் பார்க்கவோ மிகவும் பரிதாபமாக இருந்தது.

ஆரம்பத்தில் அந்தக் கடையின் அலுமாரியில் மிகவும் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த போத்தல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு வருவோரை அதன்மீது ஆசைகொள்ள வைத்தது. ஆனால் இன்று அந்த உடைந்த போத்தல் துண்டு துண்டாகக் குப்பைக் கூடைக்குள் கிடப் பதைக் கண்ட காகிதம்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பார்த்தாயா உன் நிலையை எவ்வளவு ஆணவத்துடன் என்னை கேவலமாகப் பேசினாய். இப்போது நீயே குப்பைத்தொட்டிக்குள் நிரந்தரமாகப் போய் விட்டாய். மற்றவர்களை இடிம்பு செய்யும் விதத்தில் பேசுவதற்கு முன் நமது தகுதியையும் தராதரத்தையும் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும்" என்ற காகிதத்தின் அறிவுரையைக்கேட்ட உடைந்த போத்தல் கூனிக்குறுகி மௌனமாகி ஒன்றும் பேசாமல் நொறுங்கிக் கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயருவம்



தன் வாயிலிருந்து வடியும் பசை போன்ற திரவத்தைக் கொண்டு உருவாக்கப்பட்ட மெல்லிய நூலிழையால் பாழடைந்த கிணற்றுச் சுவர் களில் வலையினைப் பின்னிக் கொண்டிருந்தது சிலந்தி.

அங்குமிங்குமாகப் பாய்ந்தும் ஓடியும் ஒரு வட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமான அமைப்பில் உருவான அவ்வலைப் பின்னலில் கம்பீரமாகவும், அனாயசமாகவும் சிலந்தி நடந்து திரிந்ததை தூரத்திலிருந்தபடியே ஒரு பச்சோந்தி தலையைத் திருப்பி, கண்களை உருட்டியவாறு அவதானித்துக் கொண்டிருந்தது.

சிறிய பூச்சிகள் ஏதும் வலையில் விழுந்தால் அதிலுள்ள பசையில் ஒட்டி வெளியே வர முடியாமல் தவிக்கும் போது அதனை "லபக்" எனச் சிலந்தி கவ்விக் கொள்ளும் என்ற விடயம் பச்சோந்திக்கு ஏற்கனவே தெரிந்ததுதான்.

சிலந்தியின் நடவடிக்கைகளை சிறிதுநேரம் பார்த்துக் கொண்டிருந்த பச்சோந்தி.

"என்ன சிலந்தியாரே ஒரு பூச்சியும் இதுவரை சிக்கவில்லை போல் தெரிகிறதே. உமது தந்திர வலையில் அகப்பட்டுக் கொள்வதற்கு இந்த சின்னஞ்சிறிய பூச்சிகள் என்ன பாவம் செய்ததோ" எனப் பரிகாசமாக, சிலந்திக்கு எரிச்சலுட்டும் வகையில் கூறியது பச்சோந்தி.

"எனது பசிக்கான உணவைத் தேடும் வழி இதுதான். தங்கள் தேவையை நிறைவேற்ற ஒவ்வொருவருக்கும் ஒரு வழி உண்டு. இதில் என்ன தவறு" எனப் பட்டென்று ஓர் ஆவேசத்துடன் சிலந்தி பதிலளித்தது.

"கோபப்படாதீர் சிலந்தியாரே, நீர் என்னதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் கூறினாலும் ஏனையவர்களை ஏமாற்றி தந்திரமான முறையில்தானே வஞ்சக வலைவிரித்து உமது உணவைப் பெற்றுக்கொள்ளுகின்றீர். முடியு மானால் எங்களைப்போன்று வேட்டையாடி பசி யைத் தீர்த்துக்கொள்ளும் பார்க்கலாம்." என சவால் விடும் தோரணையில் பச்சோந்தி கூறியது.

"நீர் கூட பெரிய யோக்கியவானோ, சந்தர்ப்பத்திற் கேற்ப உமது நிறத்தை அடிக்கடி மாற்றி ஏனையவர் களை ஏமாற்றும் வித்தையைத்தானே கடைப் பிடிக் கிறீர். அதுதான் உமது பெயருடனே "பச்சோந்தி" என்ற பட்டப்பெயரும் ஒட்டிக் கொண்டுவிட்டது.." என்று பதிலுக்கு சிலந்தியும் விட்டுக்கொடாமல் பேசியது.

"உண்மைதான். நான் நிறத்தை மாற்றுவது மற்றவர் களை ஏமாற்றுவதற்காக அல்ல. எனது எதிரிகளிட மிருந்து தப்புவதற்காகவே இதனைச்செய்கின்றேன். இதைப் புரியாமல் என்னை ஏதோ மோசடிக்காரன். நிரந்தரக் கொள்கையில்லாதவன் என்றவாறுதான் நீர் மட்டும் அல்ல எல்லோருமே நினைக்கின்றனர்". என தனது நடவடிக்கையைப் பற்றிய விமர்சனத்திற்கு நியாயத்தைக் கற்பித்து பேசியது பச்சோந்தி.

"தாங்கள் செய்யும் தவறுகளுக்கு ஒவ்வொருவரும் ஏதோ ஒரு நியாயம் கூறி தப்பிக்க முயல்வதைப் போலவே நீரும் உமது செயலை நியாயப்படுத்து கின்றீர்" எனப் பட்டென்று கூறியது சிலந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் எந்தத் தவறையும் செய்யவில்லை. என்மீது வீண் குற்றம் சுமத்தி எனக்கு வெறுப்பை ஏற்படுத் தாதீர் சிலந்தியாரே" எனக் கோபத்துடன் பேசிய பச்சோந்தியைப் பார்த்து.


"கோபப்படாதீர் பச்சோந்தியாரே, முதலில் என்மீது குறைகூறி பேச்சை ஆரம்பித்து வைத்ததே நீர்தான். அதனால்தான் நான் இவ்வாறு பேச வேண்டிய நிலை ஏற்பட்டது. நாம் மட்டுமல்ல உலகில் உள்ள ஒவ்வொருவருமே ஏதோ ஒரு வகையில் குறையோடு தான் வாழ்கின்றனர்.

எனவே ஒருவரை ஒருவர் குறை கூறுவதை நிறுத்து வோம். தனது சுயநலத்திற்காக மற்றைய ஜீவராசி களை ஏமாற்றுவதும், துன்புறுத்துவதும் ஒரு நடை முறை விதியாகவே உள்ளது. இதில் ஒருவரைப் பற்றி ஒருவர் குற்றம் கூறுவதில் எவ்வித நியாயமுமில்லை. சுயநலமும், பேராசையும் நம்மிடையே எப்போது இல்லாமல் போகுமோ அப்போதுதான் குற்றங்க ளின்றி அனைவரும் வாழ முடியும்" என ஒரு நீண்ட பிரசங்கத்தையே நிகழ்த்தி பச்சோந்தியின் வாயை அடைத்தது சிலந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாளாண்மை



வீதியமைத்தால் போல நீண்ட தூரத்திற்கு ஒன்றன்பின் ஒன்றாக நூற்றுக்கணக்கான கட்டெறும்புகள் வாயில் உணவைக் கௌவியவாறு மிகவும் உற்சாகமாக ஒரே சீரான வேகத்திலும், வழிதவறாமலும் போய்க்கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல அதற்கு எதிர்த்திசையாகவும் கட்டெறும்புக் கூட்டம் உணவு இருக்கும் இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. ஒன்றுடன் ஒன்று கதைத்து நேரத்தை வீணடிக்காமல் தாங்கள் செய்யும் வேலையில் மட்டும் கவனத்தைச் செலுத்தி கட்டுப்பாட்டோடு அந்த எறும்புகள் அனைத்தும் ஒற்றுமையாக ஈடுபட்டன. போர் வீரர்களைப் போன்று நேர்த்தியாக அணிவகுத்துச் செல்லும் அந்தக் காட்சி பார்ப்பதற்கு வியப்பாகவும், அழகாகவும் இருந்தது.

இவற்றைச் சீர்குலைக்கும் வகையில் ஒரு கரப்பான் பூச்சி எறும்புகள் செல்லும் பாதையை ஊடறுத்து அங்குமிங்குமாக ஓடித்திரிந்தது. இச்செயல் எறும்புகளின் வேகத்திற்கு ஊறுவிளைவிப்பதாக இருந்தாலும் அவைகள் அதனைப் பொருட்படுத்தாது தம் வேலையிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தன. இதனைக் கண்ணுற்ற கரப்பான் பூச்சிக்கு ஆச்சர்யமாகவும் ஆத்திரமாகவும் இருந்தது.

தான் செய்யும் இடையூறுகளைப் புறந்தள்ளியவாறு எதுவித பேச்சும் இல்லாமல் சென்று கொண்டிருக்கும் எறும்புகளின் இந்த நடவடிக்கைகள் ஏதோ ஒருவகையில் அளவுக்கதிகமான செயல்பாடாக இருப்பதாகவே கரப்பான் பூச்சிக்கு தோன்றியது.

இவைகள் ஏன் ஓய்வு இல்லாமல் இப்படி ஓடிக் கொண்டிருக்கின்றன என்பதை அறிய வேண்டும் என்ற அவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பான்பூச்சிக்கு இன்னும் அதிகமாகவே ஏற்பட்டது.

"எறும்புகளே, நான் எவ்வளவு தடுத்து நிறுத்தியும் நிற்காமல் என்னை உதாசீனப்படுத்தி இவ்வளவு அவசரமாக ஏன் ஓடிக் கொண்டிருக்கின்றீர்கள்..." எனக் கேட்டபோதும் இக்கேள்விக்கு நின்று பதிலளிக்க நேரமில்லாதவாறு எறும்புகள் தம் பணியிலேயே குறியாக இருந்தன.

இது கரப்பானுக்கு பெரிய அவமானத்தை ஏற்படுத்தியது. ஆத்திரம் கொப்பளிக்க அணியில் சென்று கொண்டிருந்த ஒரு எறும்பை தனது காலால் மிதித்தபடி,

"ஏய், குட்டி எறும்புகளே உங்களுக்கு என்ன திமிர் நான் எத்தனை தடவை கேட்டுக் கொண்டிருக்கின்றேன் கொஞ்சம்கூட அதைக் கவனத்தில் எடுக்காமல் நீங்கள் உங்கள் பாட்டிலேயே போய்க் கொண்டிருக்கின்றீர்கள். வாயைத் திறந்து பதில் கூறினால் குறைந்தா போய்விடுவீர்கள்..." எனக் கேட்டது.

கரப்பான் பூச்சியின் பிடியில் சிக்கித் திக்கு முக்காடிய எறும்பு தன்னைச் சுதாகரித்தவாறு

"அப்படி ஒன்றும் உன்னை உதாசீனப்படுத்தும் எண்ணம் எமக்கில்லை. எமது வேலையை முறையாகவும், விரைவாகவும் செய்துமுடிக்க வேண்டியுள்ளது. அதனால் வேறு எதிலும் நாம் கவனம் செலுத்தாமல் போய்க் கொண்டிருக்கின்றோம். என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கட்டெறும்பு பதிலிறுத்தது."

"அப்படி என்ன தலைபோகிற வேலை உங்களுக்கு, அதைத்தான் கேட்கிறேன். இதற்கு பதில் கூறாமல் ஏதோ அவசரப்படுகின்றாய்..." எனக் கரப்பான் பூச்சி கோபமாகக் கேட்டது.

"அது உன் போன்ற சோம்பேறிகளுக்குப் புரியாது... மழைக்காலம் வந்தால் யாருக்குமே உணவு கிடைப்பது சிரமம். அதனால் இப்போதே அதைத் தேடிச்சேமித்து வைப்போம். இதனால் எதிர்காலத்தில் உணவுக்கு எதுவித பிரச்சினையும் இராது. இதற்காகவே நாம் திட்டமிட்டு இந்த வேலையை தாளாண்மையுடன் செய்கின்றோம். உம்போல் காலத்தையும், நேரத்தையும் வீணடித்து வெட்டியாக பொழுதைக் கழிக்கும் வழக்கம் எம்மிடம் கிடையாது. என்னை இனிமேலாவது போகவிடு..." எனக் கட்டெறும்பும் சற்றுக் கடினமாகவே பேசியது.

இதைக் கேட்டதும் கரப்பானுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. "ஹா...ஹா..." எனச் சத்தமிட்டுச் சிரித்தபடியே,

"உனது பேச்சைக்கேட்க எனக்கு சிரிப்புத்தான் வருகிறது. எப்போதே வரப்போகும் மழைக்குப் பயந்து இப்போதே நீங்கள் படும்பாடு வேடிக்கையாய் இருக்கிறது." எனக் கிண்டலாகக் கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்படி கூறினாலும் அதை நீ நம்பப்போவ தில்லை. இப்போது உன்னிடம் கதைக்கும் இந்த நேரம்கூட எமக்கு விரயம்தான்" எனச் சலிப்புடன் கட்டெறும்பு பேசியதும்.

"சரி உங்கள் தலை அளவுக்குத்தானே மூளையும் இருக்கும். நன்றாக ஓடி விளையாடி உல்லாசமாகப் பொழுதைக் கழிக்க வேண்டிய காலத்தில் இப்படி உடம்பை வருத்தி வாழ்க்கையின் இன்பத்தையே இழந்துபோகும் அறிவற்ற ஜென்மங்களை நான் இதுவரை கண்டதே இல்லை.... சரி...போ..." எனக் கூறி அவ் எறும்பு செல்வதற்கு கரப்பான் பூச்சி வழி விட்டது.

காலச்சக்கரம் பலமாகச் சுழன்றது. பருவங்கள் மாறின. மாரி காலத்திற்குரிய அறிகுறியாக வானம் இருண்டு இடி முழக்கத்துடன் அடை மழை சில தினங்களாகத் தொடர்ந்தன. சகல உயிரினங்களும் வெளியே நடமாட முடியாமல் தத்தம் இருப்புக்களி லேயே அடங்கிக் கிடந்தன.

இந்நிலையில் உணவுத் தட்டுப்பாடு காரணமாக அனைத்தும் பசியால் வாடி சோர்ந்து போயிருந்தன. ஆனால் எறும்புகள் மட்டும் தான் சேமித்து வைத்தி ருந்த உணவுகளை பசிவரும்போது உண்டு நிம்மதி யாகத் தூங்கி நாட்களை நகர்த்தின.

ஒருநாள் மழைக்கு ஒதுங்குவதற்காக அவ்வழியாக வந்த




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பான் பூச்சி பசியுடன் வாடிக் களைத்த நிலையில் எறும்புகள் இருக்கும் பொந்துக்குள் உற்றுப் பார்த்தது.

அங்கு எறும்புகள் மிகவும் உற்சாகமாக இருப்பதைக் கண்டதும் அதற்கான காரணத்தைப் புரிந்து கொண்டது. முன்னேற்பாடாகவே எறும்புகள் அப்போதே தமக்கான உணவுகளை சேகரித்துள்ள உண்மை கரப் பான் பூச்சியின் உள்ளத்திற்கு இப்போதுதான் புலப் பட்டது.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்ற பழமொழிக்கேற்ப எறும்புகள் உரிய காலத்தில் முயற்சியுடனும், ஊக்கத்துடனும் உழைத்து உணவு களை சேமித்து இப்போது அனுபவிப்பதால்தான் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து தான் அப்போது எறும்புகளை கேவலமாகப் பேசி யதை எண்ணி வெட்கப்பட்டது.


எமது வாழ்க்கையில் எல்லா விடயங்களிலும் சோம் பலை ஒதுக்கி தாளாண்மையுடன் நடந்து கொண்டால் இந்த நிலைமை இன்று தனக்கு ஏற்பட்டிராது என்ப தைப் புரிந்துகொண்ட கரப்பான் பூச்சி சோர்ந்த நிலையில் அவ்விடத்தை விட்டும் தள்ளாடியபடி நகர்ந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றல்



அது ஒரு முன் மாரிக்காலம் கருமேகக் கூட்டங்கள் நீலவானத்தை மறைத்து சூரியனின் கிரகணங்களை பூமிக்கு விழாதவாறு மறைத்து சிறைப் பிடித்திருந்தது. அடிவானத்தில் பளிச்செனத் தோன்றிய மின்னலால் ஏற்பட்ட வெளிச்சத்தில் நிலத்திலுள்ள பொருட்கள் யாவுமே பிரகாசமாகத் தெரிவதும் மறைவதுமாக மாயவித்தை காட்டின. அடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடி இடியோசை வேறு பலத்த ஒலியுடன் அனைத்து உயிரினங்களையும் நடு நடுங்க வைத்தது.

சிறிது நேரத்தில் "ஓ" வென்ற பேரிரைச்சலுடன் சோனாமாரியாக எங்கும் மழை பொழியத் தொடங் கியது. அன்றைய பகல் முழுதும் கதிரவனால் பூமியை எட்டிக்கூடப் பார்க்க முடியவில்லை.

தினமும் பூமிப் பரப்பில் தன் ஒளியைப் படரவிட்டு அதன் அழகைப் பார்த்து இரசிக்கும் சூரியன் இன்று அதனைக் காணமுடியாத ஆதங்கத்தால் சோகமுடன் சோர்வுற்றுக் காணப்பட்டது.

மேகங்களோ யுத்தகளத்தில் போரிட்டு வெற்றி யீட்டிய வீரர்களைப்போல குதூகலமாக வான வீதியில் ஓடித் திரிந்தன. வானத்திலிருந்து நீர்த் தாரைகள் ஈட்டிகளாக நிலத்தை நோக்கி பாய்ந்து கொண்டிருந்தது. இந்தப் பெருமையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் ஒரு இறுமாப்பு கலந்த பார்வை யுடன் சூரியனைப் பார்த்து

"என்ன கதிரவனாரே உம்மை எப்படி அடக்கி விட் டோம் பார்த்தீரா...? உம்மால் வரண்டுபோன பூமிக்கு நாம்தான் நீர்பொழிந்து வளமூட்டினோம். இப்போதாவது எமது செயலைப் பாராட்டமல் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டிருப்பது ஏனோ...? என ஒரு எக்காளத்துடன் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கிறாயா? இந்த உலகின் முதல் சக்தியே நான் தான். எனது தயவில்தான் யாவுமே நடக்கின்றன. நீதான் காலநேரம் புரியாமல் இடையில் வந்து யாவற்றையும் நாசமாக்குகின்றாய்...." என எரிச்சலுடன் பதிலிறுத்தது சூரியன்.

"நானா நாசமாக்கினேன்... கடும் அக்கினியை வீசி எல்லாப் பயிர்களையும் வாடச்செய்தவன் நீ. மிருகங்கள் மனிதர்களும் கூட குடிக்கவும், பாவனைக்குப் பயன்படுத்தவும் நீரின்றி அலைவது உனது கண்களுக்குப் புலப்படவில்லையா? எல்லா இன்னலையும் நீ புரிந்துவிட்டு என் தலையில் பழிபோடுகிறாய்..." என ஆக்ரோசத்துடன் கூறியது மேகம்.

"ஏய், மூட மேகமே... உன் கண்களைச் சற்றுத் திறந்து பார் உன் கோரத் தாண்டவத்தால் எத்தனை ஊர்கள் நீரில் மூழ்கியுள்ளன எத்தனை உயிர்கள் வெள்ளத்தில் அடிபட்டுப் போயுள்ளன.. பயிர்கள், விளைநிலங்கள் எவ்வளவு அழிந்துள்ளன. மக்கள் யாவரும் பாதுகாப்புத்தேடி அலைவது உனக்கு தெரியவில்லையா... இந்த ஒரு வாரத்தில் மட்டும் நடந்த பாரிய அழிவுகள் எவ்வளவு மோசமானது என்பதைப் புரிந்துகொள். நான் வருடம் முழுவதும் எரிந்தாலும் இவ்வளவு அனர்த்தம் ஏற்படாது. ஒரு சில தினங்களுக்குள் யாவையுமே அழித்துவிட்டு என்னைக் குற்றம் சுமத்துகிறாயா...?" என ஆத்திரத்தில் எரிந்தது சூரியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கினியை அள்ளிவீசி அனைத்தையும் அழிக்கும் அதர்மத்தை நீயும்தானே காலம் காலமாகச் செய்து வருகின்றாய். இப்போது என்னை மட்டும் குற்றம் சாட்டுவது என்ன நியாயம்? எது எப்படி இருந் தாலும் இன்று உன்னை தலைகாட்ட முடியாமல் செய்து நான் தோற்கடித்துவிட்டேன் அது போதும்" என மேகமும் விடாது தம்பட்டமாகப் பேசியது.

"விபரம் புரியாமல் நீ பேசுகிறாய் எனது உஷ்ணத்தால் தரையிலிருந்து ஆவியாகி மேலேழுந்து கிடைக்கும் நீரைக் கொண்டுதான் நீ மழையைப் பொழிகின்றாய். நானில்லாவிட்டால் உன்னால் மழையைப் பொழிய முடியாது. என்பதை உணர்ந்துகொள். இந்த உலகம் கூட எனது சக்தியால்தான் இயங்குகிறது. இது எல்லோரும் அறிந்த விடயம் அப்படியிருக்க என்னைத் தாழ்த்திப் பேசும் அருகதை உனக்கு இல்லை." எனக் கதிரவனும் பொரிந்து தள்ளியது.

ஓயாது இடம்பெற்ற இவர்களின் வாக்குவாதத்திற்கு தடை ஏற்படுத்தியதைப்போல ஒரு பெரும் சுழல் காற்று அவ்விடத்தில் சூழ்ந்து சிறிது நேரம் நர்த்தன மாடியது. இந்த எதிர்பாராத நிகழ்வினால் கதிரவ னும், கருமேகமும் திக்குமுக்காடிப் போயின. சில நிமிடத்தில் அச்சுழல்காற்று திசை திரும்பி வேறு பக்கமாக நகரத் தொடங்கியது.

இந்த இக்கட்டான சூழலில் சிக்கித் சிதறிய மேகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் வானவெளியெங்கும் துண்டு துண்டாக உடைந்து காணப்பட்டன.




வானமும் ஓரளவு வெளிறத் தொடங்கியது. ஒரு சுழல் காற்றுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் தங்கள் ஆற்றலை இழந்த மேகமும், சூரியனும் ஒருவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒருவர் பார்க்க முடியாமல் நாணத்தால் நிலத்தை நோக்கின.

தங்களிடமிருக்கும் ஆற்றலை நன்மை பயக்கும் வழியில் செலவிட்டால் அனைவருக்கும் அது மகிழ்ச் சியாக இருக்கும். இதனை விடுத்து யாருடைய ஆற்றல் உயர்ந்தது என நிரூபிக்க முற்பட்டால் அழிவும் நாசமும்தான் கிடைக்கும் என்பதை உணர்ந் தவர்களாக இருவரும் மௌனமாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகுதி



நவீன முறையில் கட்டப்பட்டிருந்த அந்த வீடு பார்ப்பதற்கு மிகவும் அழகாகக் காட்சியளித்தது. அதன் வரவேற்பறையில் தொங்கிய மின்குமிழ்கள் பிரகாசமான ஒளியை வழங்கி அந்த இரவுவேளை யில் வெளிச்சத்தைப் பாய்ச்சி மேலும் மெருகூட்டிக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் அந்த வீட்டின் மண்டபம் முழுதும் ஜெக ஜோதியாக காட்சியளித்தது.

தனது ஒளிச் சக்தியின் மூலமே இவ்வீடு இவ்வளவு ரம்யமாகப் பிரகாசிக் கின்றது என்பதை நினைத்து மனதுக்குள் பூரித்துப் போனது மின்குமிழ். அவ் வீட்டிலுள்ள அனைவரும் மின்குமிழ் பரப்பும் வெளிச் சத்தின் உதவியைக் கொண்டு தங்கள், தங்கள் கருமங் களை மகிழ்ச்சியாக செய்து கொண்டிருந்தனர்.

ஒரு புறத்தில் சிறுவர்கள் தங்கள் பாடப் புத்தகங்களைப் படிப்பதில் தீவிரமாக இருந்தனர். மற்றொரு பக்கம் பெண்கள் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

அந்த முன்னிரவு வேளையில் மின்குமிழ்களிலிருந்து கிடைத்த ஒளிமூலம் அனைவரும் வழமைபோல் தத்தம் கடமைககளில் கவனம் செலுத்திக் கொண்டி ருந்த வேளையில் திடீரென மின்சாரம் தடைப்பட்டுப் போக அந்த இடம் முழுவதையும் இருள் ஆட் கொண்டது.

உடனே அங்கிருந்த ஒருவர் இருளில் தட்டுத் தடவிய வாறு ஒரு அலுமாரியின் மேலிருந்த மெழுகுவர்த்தி யைத் தேடி எடுத்து அதனை எரியவைத்ததும் அவ் விடம் மீண்டும் ஒளியினால் நிரம்பியது.

இதனைத் தொடர்ந்து மேலும் சில மெழுகுவர்த் திகள் அங்கு ஏற்றி வைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் மின்சாரம் மூலம் கிடைத்த பிரகாசமான வெளிச்சம் இப்போது அங்கு காணப்படாமை ஒரு குறையாகவே தெரிந்தது.

தன் ஒளி மறைந்ததும் அதற்கு மாற்றீடாக மெழுகு வர்த்தி அவ்விடத்தை ஆக்கிரமித்ததையும் கண்டு மின்குமிழுக்கு ஆத்திரம் பீறிட்டது.

"சே... என்ன நன்றிகெட்ட மனிதர்கள் இவர்கள். இதுவரை எனது ஒளியில் மகிழ்ந்தவர்கள் இப்போது மெழுகுவர்த்தியை வைத்து கொஞ்சுகிறார்களே..." என வேதனைப்பட்டது.

ஆனாலும் தனது முழுக் கோபத்தையும் மெழுகு வர்த்தி மீதே காண்பித்து மனதுக்குள் அதை வைதபடி ஆத்திரத்துடனும், பொறாமையுடனும் மின்குமிழ் குமறிக்கொண்டிருந்தது.

மெல்லிய ஒளியைத் தன் சுடர்மூலம் அங்கும் இங்கு மாக ஆடி அசைந்தபடி வீசிக்கொண்டிருந்த மெழுகு வர்த்தி மின்குமிழின் கோபப்பார்வை தன் மீது விழு வதை அறிந்துகொண்டது.

இவ்விடத்தில் தன் வருகையை விரும்பாததன் காரண மாகவே மின்குமிழ் கோபமாக உள்ளது என்பதை மெழுகுவர்த்தியும் புரிந்துகொள்ளத் தவறவில்லை. தன்னை மெழுகுவர்த்தி அவதானிப்பதை அறிந்ததும்,

"என்ன, மெழுகாரே... சுறுசுறுப்பாக இருக்கின்றீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இடத்தைப் பிடித்துவிட்ட மகிழ்ச்சியோ...?" என மின்குமிழ் மெழுகுவர்த்தியைச் சீண்டிப் பேசியது.

"அப்படி ஒன்றுமில்லை தங்களின் தேவைக்காக என்னைத் தற்காலிகமாக ஒளிர வைத்துள்ளார்கள். அதற்கு நான் என்ன செய்யமுடியும்." என்றது மெழுகு வர்த்தி சாதாரணமாக.

"இது எனது ஆதிக்கத்திற்குட்பட்ட இடம். நானே எப்போதும் இங்கு நிரந்தரமாக இருந்து ஒளி கொடுப் பவன். போதாத காலம் திடீரென என் நிலை இப்படி ஆகிவிட்டது. அதற்குள் அவதிப்பட்டு உன்னை எரிய வைத்துள்ளார்கள். இதனை வைத்து ஏதோ உன்னை தியாகிபோல நீ எண்ணிவிடாதே மின்சாரம் வந்ததும் நீ ஒரு மூலையில்தான் போய் விழுவாய்..." என ஆற்றாமைப் புழுக்கத்துடன் பேசியது மின்குமிழ்.

"அது எனக்குத் தெரியும். எப்படித்தான் இருந்தாலும் நீயும் நானும் ஒரே பணியைப் புரிபவர்கள். இதற் குள்ளே நாம் ஏன் வீணாகப் போட்டிபோட வேண்டும். எது எப்படி இருந்தாலும் மின்சாரம் வந்தால் நீ உனது கடமை யைச் செய்யத்தான் போகிறாய்..." என மெழுகு வர்த்தி கூறும்பொழுதே மீண்டும் மின்சாரம் வந்தது.

எங்கும் மின்குமிழ்கள் எரிய அவ்வீடு முழுதும் முழு மையான ஒளியைப் பெற்று மீண்டும் பிரகாசமாக காட்சியளித்தது. அவ்வேளை அரை குறையாக எரிந்து உருகிய மெழுகுவர்த்தியை ஒருவர் வாயால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதி அணைத்து அதனை ஒரு அலுமாரியின் மேல் முன்போல வைத்தார்.

இதனைக் கண்ணுற்ற மின்குமிழ் ஒரு நக்கல் சிரிப் புடன் அலட்சியமாக மெழுகுவர்த்தியைப் பார்த்து கண்ணைச் சிமிட்டியது.

சில வாரங்கள் சென்றன. ஒருநாள் இரவில் ஒளி ஏற்று வதற்காக வீட்டுக்காரர் மின்ஆளியை அழுத்திய போது அம்மின்குமிழ் எரியவில்லை இதனால் மிகக் கோபத்துடன் அந்த மின்குமிழைக் கழற்றிப் பார்த்து விட்டு மீண்டும் பொருத்தி ஆளியைப் போட்டார்.

அப்போதும் மின்குமிழ் எரியாததைக் கண்டதும் இது இனிமேல் ஒளிராது என அறிந்து அதனைக் கழட்டி வெளியே உள்ள ஒரு குப்பைத் தொட்டிக்குள் எறிந்தார். பின்னர் புதிய ஒரு மின்குமிழை அதற்குப் பதிலாக அவ்விடத்தில் பொருத்தி எரியவிட்டார்.

இனிமேலும் தன்னால் முன்போல எரியமுடியாது என்ற உண்மையை மின்குமிழ் உணர்ந்துகொண்டது.

தூள் தூளாக உடைந்து குப்பையில் கிடந்த மின்குமிழ் மிகவும் நாணத்துடனும் சோகத்துடனும் அலுமா ரியின் மேலிருந்த மெழுகுவர்த்தியை நோக்கியது. முகத்தில் எதுவித சலனமுமின்றி மிக அமைதியாக அந்த இடத்தில் நிலை கொண்டிருந்த மெழுகுவர்த்தி மின்குமிழின் தற்போதைய அவலத்தைப் பார்த்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் நிலைமையைப் பார்க்க எனக்கும் வருத்தமாகத்தான் உள்ளது என்ன செய்வது எல்லோருக்கும் தமது ஆயுள் முடிந்தால் இதே நிலைதான்." என பச்சாதாபத்துடன்கூறியது.

இதனை மெழுகுவர்த்தி தன்னை ஏளனப்படுத்துவதாகக் கருதிய மின்குமிழ் சற்று கடுப்பாக,

"உனக்கு இப்போது திருப்திதானே. இவ்வளவு காலமும் இந்த வீட்டில் எவ்வளவு பிரகாசமாக எரிந்தேன். எல்லோரும் எனது சேவையைப் பாராட்டினார்கள். அப்போது உன்னைப்பற்றி யாருமே கதைக்கவில்லை. எவ்வளவு காலம் நான் இவர்களுக்காக ஒளிகொடுத்து உழைத்துள்ளேன். இப்போது நன்றி கெட்ட முறையில் என்னைத் தூக்கி எறிந்துவிட்டார்களே. எப்படி இருந்தாலும் இங்கு நான் பெற்ற செல்வாக்கை உன்னால் பெறமுடியாது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்..." தன் இயலாமையில் ஏற்பட்ட கோபத்தில்சத்தமிட்டுப் பேசியது மின்குமிழ்

இதுவரையும் பொறுமையுடன் பதிலளித்த மெழுகுவர்த்தி தனது கோபத்தை அடக்கமுடியாமல் மின்குமிழ் மீது ஆத்திரத்தை வார்த்தைகளாகக் கொட்டத் தொடங்கியது.

" எதையும் சரியாக அறியாமல் குறை கூறுவது தவறு. உனது காலம் முடிந்துவிட்டது. இனிமேல் உன்னால் எதுவித பயனும் கிடைக்கப் போவதில்லை. உனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியின் அளவுக்கே நீ கடமையாற்றியுள்ளாய். பயனில்லாத எதுவும் இறுதியில் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்வதுதான் நியதி. உனது காலம் முடிந்ததாலேயே நீ குப்பைக்குள் வீசப் பட்டுள்ளாய். இதில் என்ன தவறு...?" எனக் காட்ட மாகப் பேசியது மெழுகுவர்த்தி.


"என்ன மெழுகாரே, நீர் உள்ளே இருக்கும் திமிரில் இப்படி என்னை அவமானப்படுத்துகின்றீரோ? நீயும் ஒருநாள் என்னைப்போல் இந்தக் குப்பைக்குள் விழும் காலம் வரும். உன்னை அப்போது பார்த்துக் கொள் கிறேன்..." என உறுமியவாறு மின்குமிழ் முறைத்துப் பார்த்தது.

"நிச்சயமாக உனது நிலை எனக்கு ஏற்படாது. உம்மைப்போல மின்சாரத்தின் உதவியினால் ஒளிர் பவனல்ல நான். என்னை உருக்கி, அழித்து அர்ப்ப ணித்துத்தான் ஒளியைக் கொடுக்கின்றேன் என்பதை முதலில் அறிந்துகொள். எனது உடலில் ஒரு சிறிய பகுதி மீதியாக இருக்கும்வரை நான் ஒளிவீசி உதவு வேன். நீ முழு உருவத்துடன் அழகாக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கே அதுவும் மின்சா ரத்தின் உதவியுடனேயே ஒளிர முடியும். இதுதான் நம் இருவருக்குமிடையேயுள்ள வித்தியாசம். மற்ற வர்களின் நலனுக்காக என்னையே அழித்து ஆகுதி யாகி ஒளியைக் கொடுக்கும் எனது தியாகத்தின் முன் நீ ஒரு செல்லாக்காசு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


என்ற மெழுகுவர்த்தியின் அர்த்தமுள்ள பேச்சைக் கேட்டதும் உண்மையை உணர்ந்த மின்குமிழ் எதுவும் பேசமுடியாமல் குப்பைக்குள் மூழ்கி தன் உடலை மறைத்துக்கொண்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரஞ்சீவி



அந்த ஊரிலேயே அதுதான் பெரிய நூலகம். அங்குள்ள நீளமான அலுமாரிகள் பலவற்றில் நூற்றுக் கணக்கான நூல்கள் மிகவும் நேர்த்தியாகவும், அழகாகவும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்நூலகத்திற்கு தினமும் பலர் வந்து செல்வதால் எப்போதும் அங்கு மாணவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள், எழுத்தாளர்கள் எனப் பலதரப்பட்ட வாசகர்களால் அது நிறைந்து காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வருபவர்களின் தேவைக்காக நூலகத்தில் பணி புரியும் ஊழியர்கள் அவர்கள் கேட்கும் நூல்களை எடுத்து வழங்குவதும் பின்னர் அதனை முதலிருந்த இடத் தில் கவனமாக அடுக்கி வைப்பதையும் தங்கள் கடமையாக செய்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

அறிவைப் பெறும் நோக்கில் நூலகத்தை நாடிவரும் வாசகர்களுக்கு இங்குள்ள தரமான பலநூல்கள் நல்ல தீனியாக விளங்கின.

நூலகத்திற்கு வருபவர்கள் நூல்களை வாசிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் அந்நூல்களிலிருந்து குறிப் புக்கள் எடுப்பதும், அதுபற்றி பாராட்டி புகழ்ந்து ரைப்பதும், பத்திரிகைகளில் எழுதுவதும் நூல்க ளுக்கு பெருமையைச் சேர்த்தன. அத்தோடு பல அறி ஞர்கள் நூல்களை ஆய்வுசெய்து அதை அடிப்படை யாக வைத்து மேலும் பல நூல்களை ஆக்கி வெளி யிட்ட வண்ணமிருந்தனர்.

இத்தகைய செயற்பாடுகளால் நூல்களின் பெருமை கொடி கட்டிப் பறந்தது. புகழின் உச்சியிலே அவைகள் தலைநிமிர்ந்து நின்றன.

ஒவ்வொரு நாளும் அங்கு வரும் வாசகர்கள் நூல்களை ஒருவர்மாறி ஒருவர் படித்து அதிலுள்ள இலக்கண, இலக்கிய ரசனை, கற்பனை வளம், கருத்து என்பவைகளை நன்கு சுவைத்து மகிழ்ந்து தமக்குள்ளேயே விமர்சித்து விவாதிப்பதை வாடிக்கையாகக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் உயரவேண்டுமானால் நூல்களை நேசி, அதைவாசி, பின்னர் யோசி என்பதைப் பின்பற்றி பலர் நூல்களுடன் தங்கள் பொழுதைக் கழித்தனர்.

இப்படிப் பலரும் நூல்களைப் பெரிதாகவும், உயர்வா கவும் கருதி அதனுடன் உறவு கொண்டாடியதால் நூல்களுக்கு ஒரே மகிழ்ச்சி. பெருமை தாளாமல் துள்ளிக் குதித்தன.

தன்னைப் பற்றிய புகழுரைகளும் தனது பயன் பாடுகள் பற்றிய விமர்சனங்களும் பலரால் பல கோணத்தில் தெரிவிக்கப்படுகின்றமையானது நூல் களை உச்சி குளிரச்செய்தன.

ஒருவன் பிறந்தான், வாழ்ந்தான், இறந்தான் என்ற வட்டத்திற்குள் நில்லாமல் அவன் உலகில் வாழும் போதே புரிந்த நல்ல செயல்களுக்காக எதிர்காலத் திலும் பேசப்படுபவனாக இருக்க வேண்டும் அது தான் அவன் பிறப்பிற்கே அர்த்தத்தைக் கொடுக்கும். இந்த அடிப்படையில் தன் மூலம் பலர் பயன்பெறும் வாய்ப்புக்களைப் பெற்று வருவதை நினைத்து நூல்கள் களிப்பில் மிதந்தன.

நூல்களுக்கு கிடைத்த மரியாதை அந்த நூல கத்தில் உள்ள வேறு எப்பொருட்களுக்கும் கிடைக்கவில்லை. நூல்களை எல்லாம் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருக்கும் அலமாரிகளுக்குக்கூட எந்தவித சிறிய பாராட்டும் இதுவரை கிடைத்ததில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் எப்போதும் புத்தகங்கள் மீது அலுமாரிக்கு ஒரு கடுப்பு இருந்துகொண்டே இருந்தது.

சிலகாலம் சென்றன. அன்று ஒருநாள் இரவு நூலகத்தில் ஏற்பட்ட மின்சார ஒழுக்கினால் நூல்கள் உள்ள ஒரு அறையில் தீ பரவத் தொடங்கியது. ஊழியர்கள் மேற்கொண்ட முயற்சியின் பின் தீ கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

எனினும் நூலகத்தின் ஒருபகுதியும், பல நூல்களும், தளபாடங்களும் பலத்த சேதமடைந்திருந்தன. இது அனைவருக்கும் தாழமுடியாத சோகத்தை ஏற்படுத்தியது.

இதில் பல அரிய நூல்கள் எரிந்து சாம்பராயின. அரை குறையில் எரிந்த நிலையில் பல நூல்கள் மீட்கப்பட்டன. ஒரு சில நூல்களே தீப்பிடிக்காமல் எஞ்சியிருந்தன. அவைகளை அங்குள்ளவர்கள் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பிவைத்தனர்.

தீயினால் ஏற்பட்ட சேதம் காரணமாக நூலகம் சில நாட்கள் திறக்கப்படவில்லை. அரை குறையாக எரிந்து பாவிக்க முடியாத நூல்கள் பல வெளியில் வீசப்பட்டன.

அவைகள் பார்ப்பதற்கே மிகவும் பரிதாபமான கோலத்தில் கசங்கி, கிழிந்து உருக்குலைந்து கிடந்தன. மழையிலும் வெயிலிலும் அடிபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் தாம் இப்போது யாருமே கவனிக்காது ஒதுக்கப்பட்டதை நினைத்து அந்நூல்கள் வேதனைப் பட்டன.

இச்சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திய புத்தக அலுமாரி கிழிந்து கிடக்கும் நூல் களைப் பார்த்து,

“நீ எவ்வளவு பெருமையுடன் இருந்தாய் இப்பொழுது உன்னைப் பார்க்கவே பரிதாபமாக உள்ளது. பாவம் நீ. . .” எனப் போலியான அனுதாபத்தடன் பேசியது.

இப்போதைய சூழலில் பதிலேதும் கூற முடியாத கையறு நிலையிலிருந்த கிழிந்த புத்தகம் மௌனமாக இருந்தது.

சில நாட்களின் பின் அந்த நூலக முன்றலில் வாசிப்பு வாரத்தை முன்னிட்டு ஒரு பொதுக் கூட்டம் நடை பெற்றது. அதில் பேசிய பலரும் வாசிப்பின் அவசியத் தையும், நூல்களின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டி ஆழமான பல கருத்துக்களை முன்வைத்தனர்.

“உலகில் நூல்களைப் போன்ற நல்ல நண்பர்கள் யாரு மில்லை. அவைகள் நமக்கு எப்போதும் நல்ல வழியை மட்டுமே போதிக்கும். அவைகள் அழிந்தாலும் அதிலுள்ள கருத்துக்கள் சிரஞ்சீவியாக என்றும் உலகில் உயிர்வாழும்” என அங்கு பேசிய ஒரு அறிஞர் தன்னைப்பற்றி உயர்வாகக் கூறிய கருத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதும் தனக்கு எப்போதும் மரணமில்லை என உணர்ந்து அழிந்த நிலையிலிருந்த நூல் புத்துயிர் பெற்றதுபோல தோற்றமளித்தது.


நூல்கள் தீயில் வெந்து கருகியதால் இனிமேல் அதனால் எவ்வித பயனுமில்லை எனக் கருதி நகைத்த அலுமாரி இந்த உரையால் மௌனித்துப்போனது.

தான் அழிவில்லாத ஒரு சிரஞ்சீவி என்ற உண்மையை உணர்ந்த கிழிந்த நூல் இப்போது எவ்வித சலன முமின்றி நிம்மதியாக அங்கு வீசிய காற்றில் திருப்தி யுடன் அசைந்தாடிக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வஞ்சகம்



ஒரு காலத்தில் ஒன்றாகத்தான் இருந்தன இந்த நாய்களும், நரிகளும், ஒரே இனம், ஒரே குடும்பம் என்ற வகையில் இவை இரண்டும் ஒன்றாக இருந்தாலும் தங்கள் அடிப்படைக் குண இயல்புகள் காரணமாகப் பிரிய நேரிட்டமை ஒரு வரலாற்றுக் கதையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே உருவத் தோற்றத்துடன் பிறக்கும் நாயும், நரியும் குட்டிகளாக வளரும்போது இனம்காண முடியாதவாறு பார்ப்பதற்கு ஒரேவிதமாகவே தோற்றமளிக்கும்.

நாய்க் குட்டியோ தனக்கு உணவளிக்கும் மனிதர்களை எஜமானர்களாகக் கருதி எப்போதும் அவர்களையே சுற்றி வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தது. நரிகளோ உணவை உண்டதும் தன்பாட்டில் சென்று விடும். சிலவேளைகளில் நாய்களின் உணவையும் மிகத் தந்திரமாகத் திருடி உண்ணுகின்ற தீய பழக்கத்தையும் நரி கொண்டிருந்தது.

இதனை நாய்கள் அறிந்திருந்தாலும் அதன்மீது ஏற்பட்ட பயம் காரணமாக மௌனிகளாகவே இருந்தன. மேலும், மனிதர்களுக்கு தீங்கு செய்யும் வகையில் அவர்களின் பொருட்களையும் இடையிடையே திருடிவந்தன. இதனால் மனிதர்களுக்கு விசுவாசமாக உள்ள நாய்கள் பெரிதும் சங்கடப்பட்டன.

ஆனால் நாள்போக மனிதர்களும் அதனை வெறுத்தனர். இதனை உணர்ந்த நரிகள் தங்கள் கோபத்தை நாய்கள்மீது காட்டத் தொடங்கின.

வஞ்சகக் குணமுடைய நரிகளின் நடவடிக்கையால் இரு இனங்களுக்குமிடையே முரண்பாடுகள் தோன்றி அடிக்கடி சண்டைகள் ஏற்படலாயின.

காலப்போக்கில் நரிகளின் உடல் வளர்ச்சியில் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறம், வால் போன்ற அவயங்களில் வித்தியாசம் ஏற்பட்டது. பார்ப்பதற்கு விகாரமாகக் காட்சிய ளித்தன. இத்தோற்றம் நாய்களை அச்சுறுத்தியது. மேலும் நரிகளின் நீதியற்ற செயல்களைப் பார்த்தும் நாய்கள் ஒன்றும் பேசாது விட்டுக்கொடுப்புட னேயே காலம் கழித்தது.

ஆனாலும் நாய்களின் வழியில் அடிக்கடி நரிகள் வாத கம் புரிந்து சிரமத்தை ஏற்படுத்தியதால் இதனுடன் உறவாடுவதைத்தவிர்த்து நாய்கள் ஒதுங்கியே இருந்தன.

இதன் காரணமாக நரிகள் தனிமைப்படுத்தப்பட்டன. திருடுவதையே தொழிலாகக்கொண்ட நரிகள் ஊரில் தனியாக அலைந்தால் ஆபத்து என்பதை அறிந்து காடுகளுக்குள் சென்று வாழத்தொடங்கின. இதுவே நாய், நரிகளின் பிரிவுக்கு அடிப்படையாக அமைந்தது.

இப்படி இவை இரண்டும் வெவ்வேறாகப் பிரிந்து ஊரிலும், காடுகளிலும் தங்கள் வாழ்விடங்களை ஏற்படுத்திக் கொண்டாலும் பலமும், முரட்டுக் குணமுமிக்க நரிகளுக்கு முன் நாய்கள் எப்போதும் அடங்கியே இருந்தன.

நள்ளிரவு வேளைகளில் வீட்டுக்குக் காவலாக இருக் கும் நாய்களை ஊருக்குள் பதுங்கி நுழையும் நரிகள் ஏமாற்றி கோழிகள், உணவுப் பொருட்களை கொள் ளையடித்துச் செல்கின்றமையை வழக்கமாகக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை எதிர்த்துப் போராட முடியாத கையாலா காத நிலையில் நாய்கள் மிகவும் வருத்தப்பட்டன. நரிகளின் தந்திரமான இச்செயல்கள் நாய்களுக்கு பெரிய தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது. தமக்கு உணவு, உறைவிடம் வழங்கும் வீட்டு எஜமானர்க ளாகிய மனிதர்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என்ற உயர்வான நோக்கத்திற்கு ஏற்பட்ட சவாலாகவே இதனைக் கருதின.

இதை எப்படி சமாளித்து வெற்றி பெறுவது என்பதைப் பற்றி நாய்கள் சிந்திக்கத் தொடங்கின. தந்திரத்தில் மிகைத்த நரிகளை நேரடியாக மோதி வெற்றி பெறுவது முடியாத விடயம் என்பதால் இதற்கான மாற்று வழி யைத்தான் காணவேண்டும் என நாய்கள்தீர்மானித்தன.

ஒரு நாள் நள்ளிரவில் வழமைபோல் காட்டிலிருந்து நரிகள் மெல்ல மெல்ல அடிவைத்து ஊருக்குள் நுழைந்தன. இதனை எதிர்பார்த்து ஏற்கனவே விழிப் புடனிருந்த நாய்கள் யாவும் ஒன்று சேர்ந்து சற்று முன்னோக்கி வந்து அதனைத் தடுத்து நிறுத்தும் வகையில் நின்றன. இச்செயல் நரிகளுக்கு பெரும் வியப்பை ஏற்படுத்தியது.

"என்ன நாயாரே, எம்மைத் தடுத்து நிறுத்துவதற்கு திட்டமிட்டிருக்கின்றீர்களோ எங்களை எதிர்ப்பதற்கு உங்களுக்கு எப்படித் துணிவு வந்தது..." என அகம் பாவத்துடன் ஒரு நரி பேசியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் புரியும் அக்கிரமங்களை இனியும் எம்மால் பொறுத்துக்கொள்ள முடியாது. தயவுசெய்து வந்த வழியே திரும்பிச் சென்றுவிடுங்கள். நீங்கள் புரியும் அநியாயத்தால் எங்கள் மீதும் பழிவந்து விடுகின்றன. எங்கள் வாழ்க்கையைச் சீரகுலைக்காதீரகள்..." என வினயமாக ஒரு நாய் அங்கிருந்த நரிகளைப் பார்த்துக் கூறியது.

"சீ வாயை மூடு, இதைக்கூற நீ யார்? எங்கள் இனத்தை ஒத்த நீ எமக்கு எதிராகவே கதைப்பது வேடிக்கைதான். இதோ உங்களை ஒன்றும் செய்யாமல் விடுகின்றோம். மரியாதையாக ஒதுங்கிப் போய்விடுங்கள்......" என நரி உறுமியது.

"இனிமேலும் உங்கள் களவுக்கு இடம்கொடுக்க எம்மால் முடியாது. எம்மை வளர்த்து பராமரிக்கும் எஜமானர்களுக்கு துரோகம் செய்யமாட்டோம். அவர்களுக்கு நாம் நன்றிக்கடன் பட்டவர்கள். எம் வழியில் வாதகம் செய்யாமல் போய்விடுங்கள். இதுதான் எம் முடிவு. நீ உன்னால் முடிந்ததைச் செய்..." என சவால் விடும் தோரணையில் ஒரு நாய் முன்வந்து பேசியதும் நரிகளுக்கு சற்று அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இருந்தாலும் இதனை வெளிக்காட்டாது நரிகள் தங்களை சுதாகரித்தவாறு நாய்களை எதிர் நோக்கியபடி நகர்ந்தன. நாய்களும் சாதுர்யமாக சற்று பின்வாங்குவதுபோல் நகர்ந்து பலத்த குரலில் குரைக்கத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய்களின் ஒலிக்குப் பதிலிறுப்பதுபோல நரிகளும் விட்டுக்கொடுக்காது ஒன்றாக "ஊ...ஊ..." என உரத்து ஊளையிடத் தொடங்கின.

நரிகளின் ஊளைச் சத்தம் தொடர்ந்து ஒலித்தன. இதனால் அந்தப் பகுதியிலிருந்தவர்கள் கண்விழித்து ஏதோ அசம்பாவிதம் நடைபெறுவதாக உணர்ந்து கையில் ஆயுதங்கள் தடிகளுடன் அவ்விடத்திற்குள் விரைந்து வந்து நரிகளை ஓட ஓட விரட்டி அடித்தனர்.

இதனை எதிர்பாராத நரிகள் அங்குமிங்குமாகச் சிதறி யபடி காயங்களுடன் ஒரே ஓட்டமாக ஓடி காட்டுக் குள்சென்று ஒழிந்து தப்பிக்கொண்டன.

நரிகளை ஊளையிட வைக்க தாங்கள் செய்த தந்திரத் தால் மாட்டிக்கொண்ட நரிகள்மூலம் இனி தமக்கு எவ்வித வாதகமும் ஏற்படாது என்ற திருப்தியில் வாலை ஆட்டியவாறு நாய்கள் தங்கள் எஜமானர் களின் பின்னால் சென்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்துணர்வு



முற்றமெங்கும் சிந்திக்கிடந்த நெல்மணிகளை ஒவ்வொன்றாக தம் அலகுகளால் கொத்தித் தின்று கொண்டிருந்தன அங்கிருந்த கோழிகள். இருந்தாலும் முற்றம் முழுவதிலும் சிதறிப் பரந்திருந்த நெல் மணிகளின் எண்ணிக்கையில் அதிகம் குறைவு ஏற்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்தில் அங்கிருந்த காகம், புறா, குருவி போன்ற பறவைகளும் அவ்விடத்தில் இறங்கி நெல் மணிகளைப் பொறுக்கி உண்பதில் ஈடுபட்டன. இதனை அவதானித்த கோழிகள் தாங்கள் உண்பதை நிறுத்தி அவைகளை விரட்டியடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தன.

இதனால் அப்பறவைகள் அங்குமிங்குமாகப் பாய்ந் தும் பறந்தும் கோழிகளை ஏமாற்றிய வண்ணம் தொடர்ந்தும் நெல்மணிகளைப் பொறுக்கி உண்ட வண்ணம் மிருந்தன. இது கோழிகளுக்கு மிகுந்த எரிச்சலையும், கோபத்தையும் ஏற்படுத்தியது.

துரத்துவதை நிறுத்திவிட்டு கோழி தனது உரத்த குரலில் "ஏய் பறவைகளே, உங்கள் கெட்டித்தனத்தை எம்மிடம் காட்ட வேண்டாம். எங்கள் வீட்டு எஜமான் வந்தால் உங்களை என்ன செய்வார் தெரியுமா? இது எமக்குச் சொந்தமான உணவு. இதை யாரும் அபக ரிக்க நாம் அனுமதிக்கமாட்டோம்" எனக் கூறியது.

"நீங்கள் கூறுவது அபத்தமானது இங்கு சிந்தியுள்ள உணவுகள் எல்லோருக்கும் பொதுவானது. இதில் எமக்கும் உரிமை உண்டு. இதனை நீங்கள் தடுப்பது அநீதியாகும்" என ஒரு புறா கோழியைப்பார்த்துக் கூறியது.

"இது எமக்குரிய இடம். இங்குள்ள உணவுகளும் எமக்கு மட்டுமே சொந்தமானது. எங்களை வளர்ப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் இந்த நெல்மணிகளை இங்கு விட்டுச் சென்றுள்ளார்கள். இதற்கு எப்படி நீங்கள் உரிமை கொண்டாட முடியும்." என்ற கேள்வியை எழுப் பியது ஒரு கோழி.

"நீ கூறுவதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது மேலதிகமாக சிந்திய உணவுகள். நம்போன்ற அனைத்து உயிரினங்களுக்கும் இது உரிமையானது. மனிதர்கள் தங்கள் விவசாய அறுவடையில் நம் போன்றவர்களுக்கும் ஒரு பகுதியை கொடையாக வழங்குகின்றார்கள். யாவும் போக மீதியையே இலா பமாகக் கொண்டு செல்கின்றார்கள். இதுதான் உலக நடைமுறை. இந்த விடயமெல்லாம் உனக்குத் தெரியாமையால்தான் இப்படி நீ பேசுகின்றாய்" என அங்கிருந்த மரக்கிளையில் அமர்ந்திருந்த குருவி ஒன்று தனது கருத்தைக் கூறியது.

"இது என்ன புதுக்கதையைக் கூறுகின்றாய் இவை யாவும் எமக்குரியது. இதில் யாருக்கும் உரிமை கோர இடமில்லை. இதுதான் எமது நிலைப்பாடு. இதற்கு மேல் உங்களுடன் எம்மால் விவாதிக்க முடியாது. இங்கிருந்து இப்போதே போய்விடுங்கள்..." என அச்சுறுத்தும் தொனியில் கோழி குரல் கொடுத்தது.

"சரி உங்கள் முடிவைக் கூறிவிட்டீர்கள் இதோ எங்கள் முடிவையும் கூறுகின்றோம். உலகத்திலுள்ள அனைத் துமே எல்லோருக்கும் பொதுவானது. அவரவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிக்கேற்ப அதனைப் பெற்றுக் கொள்ளும் சுதந்திரம் அனைவருக்கும் உள்ளது. அதேவேளை தனக்குத் தேவையானவற்றிற்கு மேலதிகமாகச் சேர்த்து தனக்கும் பயன்படாமல் தேவைப்படுபவர்களுக்கும் கொடுக்காமல் தனியுடமையாக்கிக் கொள்வது தர்மமாகாது. அப்படிச் செய்தால் அதைப் போராடியாவது பெற்றுக்கொள்ளும் நிர்ப்பந்தம் பாதிப்படைபவர்களுக்கு ஏற்படும். இதனால் வீண் இழப்புக்கள் தான் நேரிடும். உங்களுக்குத் தேவையானது போக மீதியாக உள்ள நெல் மணிகளை நாங்கள் உண்பதால் உங்களுக்கு என்ன நட்டம் ஏற்படப் போகிறது..." என ஒரு புறா நீண்ட விளக்கத்தைக் கொடுத்துப் பேசியது.

புறாவினது இத்தெளிவான விளக்கம் கோழியைச் சற்று சிந்திக்கத் தூண்டியது. தமது செயற்பாடுகள் சரிதானா என்ற சந்தேகமும் இப்போது கோழிகளுக்கு ஏற்பட்டது. ஒன்றுமே பேசாமல் மௌனமாக இருந்த கோழிகள் சிறிது நேரம் தமக்குள் ஓர் ஆலோசனையை நடாத்திய பின்னர்.

"சரி புறா, கூறுவதைப் போன்று மேலதிகமாக இருக்கும் உணவை நீங்கள் எடுத்துக் கொள்வதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் எங்களுக்க இடர் இல்லாதவாறு உங்கள் நடவடிக்கை இருக்க வேண்டும். ஏனென்றால் எம்மைவிட நீங்கள் பறக்கும் ஆற்றல்மிக்கவர்கள். இனி நாம் எவ்வித பிரச்சினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் ஒற்மையாக வாழ்வோம்." எனக் கூறிய கோழி அங்கிருந்த பறவைகளுக்கு ஒதுங்கி வழி விட்டது.

அந்நேரம் அங்கு வந்த மைனா ஒன்று இந்த நிலைமை களை அவதானித்துவிட்டு...

"பார்த்தீர்களா நண்பர்களே நம்மிடமிடையே சரியான புரிந்துணர்வு இல்லாமையால்தான் இப்படியான முரண்பாடுகள் ஏற்படுகின்றன. மற்றவர்களின் உணர்வுகளுக்கு இடம்கொடுத்து விட்டுக் கொடுப்பு டன் வாழும் ஒரு பொதுஉடமை அமைப்பில்தான் நாம் மகிழ்ச்சியாக வாழலாம் என்பதை எப்போதும் மறந்து விடக்கூடாது. அதற்கு இந்தச் சம்பவமே ஓர் உதாரணமாகும். நாம் வேறுபாடுகளை மறந்து இனி ஒற்றுமையாக வாழ்வோம்..." எனக் கூறியதும் அனைத்து பறவைகளும் கோழிகளுடன் சேர்த்து மகிழ்ச்சியுடன் நெல்மணிகளைப் பொறுக்குவதில் ஈடுபட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இதுவரை வெளிவந்தவை...

- முத்து (கவிதைகள்) - 1976
- பிட்டும் தேங்காய்ப்பூவும் (கவிதைகள்) - 1998
- இழந்துவிட்ட இன்பங்கள் (கவிதைகள்) - 2003
- ஆசிரியர் பணியை அழகுறச் செய்வோம் (கட்டுரை) - 2005
- ஒரு காலம் இருந்தது (கவிதைகள்) - 2010
- "ஓசை" - (காலாண்டு கவிதைச் சிற்றிதழ்) - ஆசிரியர்

**Publication :** Mutur Kalai Ilakkiya Ondriyam

**Printers :** AJ Prints-Dehiwela

**ISBN : 978-955-52246-1-1**

9 789552 246 1 1

Mutur Muhaideen-0774203500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org